ஸ்ரீமத் ஸர்வஜ்ஞானோத்தராகமம்

யோக பாதம்

(ஸ்ரீமத் அகோரசிவாசாரியார் இயற்றிய விருத்தியுரையுடன் கூடியது)

வெளியீடு:

ஸ்ரீமத் அகோரசிவாசார்ய அறக்கட்டளை

சென்னை.

सर्वज्ञानोत्तरागमः

योगपादः

अघोरशिवाचार्यकृतवृत्तिसहितः

SARVAJÑĀNOTTARĀGAMA
YOGAPĀDA

With the commentary of
Aghoraśivācārya

Critically edited for the first time
on the basis of manuscripts
with detailed introductions in Tamil and English
and with a Tamil translation

Edition and Translation

Dr. T. GANESAN
Senior Researcher
French Institute
Pondicherry

Sri Aghorasivacharya Trust
CHENNAI

सर्वज्ञानोत्तरागमः

योगपादः

अघोरशिवाचार्यकृतवृत्तिसहितः

ஸர்வஜ்ஞானோத்தராகமம்

யோகபாதம்

அகோரசிவாசாரியாரியற்றிய
விருத்தியுரையுடன் கூடியது

சுவடிகளின் ஆதாரத்தில்
நன்கு திருத்தியமைக்கப்பட்ட பதிப்பு
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விரிவான
முன்னுரைகளும், தமிழ்மொழிபெயர்ப்பும்
கொண்டது

பதிப்பும் முன்னுரைகளும்

தி. கணேசன்

சைவசித்தாந்த முதுநிலை ஆராய்ச்சியாளர்
பிரெஞ்ச் இந்திய ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

வெளியீடு

ஸ்ரீஅகோரசிவாச்சார்ய டிரஸ்ட்
சென்னை

நூல் விளக்கக் குறிப்பு

நூல் பெயர்	:	ஸர்வஜ்ஞானோத்தராகமம்
பதிப்பாசிரியர்	:	Dr. T. கணேசன்
மொழி	:	ஸம்ஸ்க்ருதம், தமிழ், ஆங்கிலம்
பொருள்	:	சைவயோகம்
பதிப்பு ஆண்டு	:	2009
பிரதிகள்	:	500
தாள்	:	Dy. 8 kg. மேப்லித்தோ
நூல் அளவு	:	Dy. 1/8
எழுத்து	:	12
பக்கங்கள்	:	96
விலை	:	
கணினி வடிவமைப்பு & அச்சிட்டோர்	:	ஸ்ரீ துர்கா இந்திய ஆய்வியல் நிறுவனம், நயினாரகரம்.
வெளியீடு	:	ஸ்ரீஅகோரசிவாச்சார்ய டிரஸ்ட் எண் 17.ம.பொ.சி தெரு எம்.ஜி.ஆர் நகர் சென்னை -78 தொலைபேசி 24744229

© SriAghorasivacharya Trust ®
Chennai –78

உ

ஸ்ரீ குருப்யோ நம:

திருமணவிழா மலர்

தம்பதிகள்

சிரஞ்சீவி **க. கார்த்திகேய சிவம்**

ஸௌபாக்யவதீ **உ. ஆர்த்தி**

நாள்

ஸ்ரீ விரோதி வருஷம், ஆனிமாதம் 25ம் நாள்

09.07.2009 வியாழக்கிழமை

இடம்

M.A.V.M.M. திருமண மண்டபம்

திருப்பரங்குன்றம்.

இந்நூல்
மதுரை, திருநகர்
சிவஸ்ரீ ரா. கங்காதர பட்டர் ஸ்ரீமதீ கௌரீ
தம்பதிகளின் புதல்வன்
சிரஞ்சீவி க. கார்த்திகேய சிவம்
மதுரை
சிவஸ்ரீ ஷ. உக்ரபாண்டிய பட்டர் ஸ்ரீமதீ மதுரவாணீ
தம்பதிகளின் புதல்வி
ஸௌபாக்யவதீ உ. ஆர்த்தீ
ஆகியோரது
திருமணவிழா நன்னாளில்
திருக்கோளக்குடி
ஸ்ரீ ககோளபுரீச்வரஸ்வாமி திருக்கோயில் ஸ்தானிகர்
பூலாங்குறிச்சி
ஸ்ரீ யஜ்ஞேச்வர ஸ்வாமி திருக்கோயில் அறங்காவலர்
திருப்பரங்குன்றம்
ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலய மாணவர்
சிங்கப்பூர்
ஸ்ரீ வீரமாகாளியம்மன் திருக்கோயில் அர்ச்சகர்
சிவாகம பாஸ்கர
சிவஸ்ரீ தி. கனகஸபாபதி சிவம் அவர்கள்
வழங்கிய நிதியுதவி கொண்டு
வெளியிடப்படுகிறது
ஸ்ரீ விரோதி வருஷம் ஆனி மாதம் 25ம் நாள்
வியாழக்கிழமை
09.07.09
M.A.V.M.M திருமண மண்டபம்
திருப்பரங்குன்றம்
மதுரை.

ஓர் வேண்டுகோள்

शिवेन स्थापितं शैवं शैवेन स्थापितं शिवम् ॥

மெய்யன்பர்களே !

மனிதனுக்கு வாழ்க்கையின் உன்னதமான குறிக்கோள் என்ன என்பதை விளக்கி அதை அடைவதற்கு வழியாக இறைவனால் தோற்றுவிக்கப்பட்டதே நமது சமயம். நாமும் அந்த உன்னதமான பரமானந்த நிலையை அடைய நமக்கு உதவுவன பரமேச்வரனால் உபதேசம் செய்யப்பட்ட சாஸ்த்ரங்களும் அவற்றை உபதேசிக்கின்ற ஆசார்யர்களுமே. எனவே சாஸ்த்ரங்களை வெளியிடுவதையும் ஆசார்யர்களை உருவாக்குவதையும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இறைவனருளாலும் பெரியோர்களின் நல்லாசியுடனும் கடந்த 2002ம் ஆண்டு ஸ்ரீஅகோரசிவாச்சார்ய டிரஸ்ட் என்ற அமைப்பை நிறுவினோம். மெய்யன்பர்களின் பேராதரவினால் இதுவரை ஒன்பது நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் இன்னும் ஏராளமான நூல்கள் கிடைப்பதற்கு ஓலைச் சுவடிகளாகவும் உள்ளன. அவற்றை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இதைக்காணும் அன்பர்கள் தங்கள் மணவிழாவிலோ பெற்றோரின் மணிவிழாவிலோ மற்ற நிகழ்ச்சிகளிலோ ஏதாவது ஒரு நூலை வெளியிடும் செலவை ஏற்றுக்கொண்டு சைவாகமப் பணிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். விருப்பமுள்ள அன்பர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

முகவரி

சிவப்பணியில்

க.கார்த்திகேயசிவம்

ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம்

திருப்பரங்குன்றம்.

பொருளடக்கம்

	பக்கம்
ஆசியுரைகள்	
பதிப்புரை	
முன்னுரை	i-xx
Introduction	xxi-xlii
सर्वज्ञानोत्तरागमः योगपादः	1-12
தமிழ் மொழிபெயர்ப்பு	13-27
मूलागमश्लोकपादसूची	
Bibliography	34-35

ॐ

श्री गुरुभ्यो नमः

Swami Omkarananda

Acharaya : Sri Dakshinamurti Vidya Pitham

Founder & Managing Trustee : Vedanta Sasthra Prachara Trust Sri Dakshinamurti Seva Samiti

---

வாழ்த்துரை

தேதி : 18-01-2005

உய்ந்தனம் என்பீர், உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரில் கறக்கின்ற நந்தியைச்
சிந்தை உறவே தெளிந்து இருள் நீங்கினால்
முந்தைப் பிறவிக்கு மூலவித்து ஆமே

- திருமந்திரம்

பசு எனப்படும் ஜீவன் பதியாகிய இறைவனை அடைதலே பரமபுருஷார்த்தம். அதாவது உயிர் தனக்கு உயிராகிய உணர்வை உணர்ந்து அந்நிலையிலேயே நிலைத்து நிற்பது, பெறுதற்கரிய பிறவியைப் பெற்றவர்கள் பெறவேண்டிய பெரும்பேராகும். அண்ணல் அருளிய ஆகமங்கள் அதற்குரிய நெறிகளைக் காட்டுகின்றன. சித்தமலம் அறுவித்து சிவமாகும் செந்நெறியாகிய சிவயோகத்தை இவ்வரிய நூல் அழகாக விளக்குகிறது.

யோகத்தின் இலக்கணம் (யோகம் என்ற சொல்லின் பொருளை இலக்கண ரீதியாகக் கூறுதல்), யோகத்தை மேற்கொள்ளுபவர்களுக்குரிய தகுதி, யோகத்தின் படிநிலைகள், படிநிலைகளை முறையே நிறைவேற்றுவதால் பெறப்படும் பயன்கள், யோகத்தை மேற்கொள்ளும் கருவியாகிய மனத்தின் தன்மை, யோகத்தின் இலக்கு, யோகத்தின் பயன்கள், யோகிக்குரிய விதிமுறைகள், (யோக அந்தரங்க, பஹிரங்க சாதனங்கள்) முறையாக விளக்கப்பட்டுள்ளன.

பகவான் பதஞ்ஜலியின் அஷ்டாங்க யோகத்திற்கும், இச்சிவயோகத்திற்குமுள்ள வேறுபாடு கூறப்பட்டுள்ளது. இருப்பினும் பதஞ்ஜலியின் பரிபாஷை (கலை)ச் சொற்கள் நன்கு இதில் விரவியிருப்பதைக் காணலாம். பரிபாஷைச் சொற்களுக்குப் பொருள் கொள்வதிலும் சிறு வேறுபாடு காணப்படுகிறது. சிவாகம சாஸ்திரங்களில் பரமசிரத்தை யுடையவர்களுக்கு இந்நூல் மேலும் அறிவைத் தெளிவாக்கும் என்பதில் ஐயமில்லை. திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய முதல்வர் சிவஸ்ரீ சந்த்ரசேகரசிவாச்சார்யார் (ராஜாபட்டர்) அவர்களது ப்ரிய சிஷ்யரும் எனது பேரன்புக்குரியவருமான சிவஸ்ரீ க.கார்த்திகேயசிவம் (சிங்கப்பூர்) அவர்கள், அகோரசிவச்சார்யார் அவர்கள் பெயரில் உருவாக்கியுள்ள அறக்கட்டளையின் மூலம் இதனை வெளியிடுவதைக் குறித்து மிக்க மகிழ்ச்சி.

பெரும் புகழ்வாய்ந்த பரமபூஜ்யஸ்ரீ அகோரசிவாச்சார்ய முனிவரால் விளக்கப்பட்டுள்ள இவ்வரிய உரையினை ஆதிசைவ இளைஞர்கள் கற்க வேண்டுமென்பது என்னுடைய அவா. எனது அவா நிறைவேற வேண்டுமென்று ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தியின் திருவடிமலர்களை வந்தித்து, சிந்தித்து ப்ரார்த்திக்கிறேன்.

வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்
வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகும்
உளங்கனிந் துள்ளும் உகந்திருப் பார்க்குப்
பழங்கனிந் துள்ளே பகுந்துநின் றானே

- திருமந்திரம்

ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!

உளம் கனிந்த நல்வாழ்த்துக்களுடன்

(ஸ்வாமீ ஓங்காராநந்த)

Sri Swami Chidbhavananda Ashramam
P.Box. No. 23, Vedapuri; Chatrapatti Road, Theni - 625 531.
Ph : 04546-251910 Cell : 9443051910
E-mail:adiguru@gmail.com www.vedancri.org

Agama Praveena-Sivagama Boopathi
Sivagama Rathnakaram

A.V.SWAMINATHA SIVACHARIYAR
Founder & Principal
Sivapuram Vedha Sivagama Patasalai.

Re :
4th Cross Anna Nagar,
Dharmapuram Road
Mayiladuthurai- 609 001.
Tamil Nadu. S.India.
Ph: 04364-226440, Cell : 9443489491

Patasalai :
32, Mayuranathar South Street,
Mayiladuthurai-609 001.
Ph :04364-223939

Date 14-1-2005

வாழ்த்துரை

பெறுதல்
ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட்
சென்னை

பேரன்புடையீர், வணக்கம்.

தங்களின் பெருமுயற்சியால் பல சிவாகம நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்ந்திருக்கின்றோம். தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தாரால் முன்பு அரிய பல மூலாகமங்கள் வெளியிடப்பட்டன. இடைக்காலத்தில் சற்று தொய்வு ஏற்பட்டிருந்த நிலையில் இப்பொழுது தங்களைப் போன்ற நல்லோர்களால் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயத்தின் 11ஆம் ஆண்டு நிறைவு விழாவில் ஸர்வஜ்ஞானோத்தராகமம் யோகபாதம் தங்களின் அறக்கட்டளையின் மூலம் வெளியிடுவதையறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். சிவபுண்ணியத்தில் தலைசிறந்தது சிவாகம நூல் வெளியீடாகும். தங்கள் பணி சிறக்க எம்பெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

தங்கள்

14-1-2005

ஸ்ரீகற்பக விநாயகர் துணை

விகாஸரத்ன
டாக்டர் சிவஸ்ரீ கி. பிச்சை சிவாசார்யார்,
சிவநெறிக்கழகம்,
பிள்ளையார்பட்டி.

வாழ்த்துரை

சென்னை ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட் சைவ சமயத்திற்கும் சிவாகம வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு வருவது அனைவரும் அறிந்ததே. குறுகிய காலத்தில் அதிகமான புத்தகங்கள் பயனுள்ள முறையில் சைவ உலகுக்கு வழங்கி வருகிறது. நமது சிரஞ்சீவி க.கார்த்திகேய சிவமும் ஸதாஸர்வ காலமும் சிவாகம வளர்ச்சியை சிந்தித்து வருவது போற்றுதற்குரியது. தற்சமயம் ஸ்ரீமத் ஸர்வஜ்ஞானோத்தர யோகபாதம் அகோர சிவாச்சார்ய வ்யாக்யானத்துடன் வெளிவருவது குறித்து மகிழ்ச்சி. நமது திருப்பரங்குன்றம் ஸ்கந்தகு வித்யாலயத்தின் 11ஆம் ஆண்டு விழாவில் வெளிவருவது மிகவும் பொருத்தமே. அறிஞர்கள் அனைவரையும் பாராட்டி மகிழும் இந்த அறநிலையும் அதன் உறுப்பினர்களும், வித்யாலய முதல்வர் சிவஸ்ரீ ராஜாபட்டர் அவர்களுக்கு மேலும் எல்லா நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பகவிநாயகர் திருவடிகளை பிரார்த்திக்கிறேன்.

Sivamayam

K. RAJAPPA GURUKKAL
Saivasidhantha Agama Sagaram
Sivagama Zana Banu
Sivagama Selver

Heriditary Sthanikar & Archakar
Sri Ekambaranathar &
Kailasanathar Temple

45. E.K. Sannathi Street, KANCHEEPURAM-631 502.
Ph : 04112 - 23948 Fax : 04112 - 23948

வாழ்த்துரை

சிவபெருமானால் அனைத்து உலகிலுள்ள உயிர்கள் உய்யும் பொருட்டு வேதமும் ஆகமமும் அருளப் பெற்றன. அவற்றில் சிவாகமங்கள் 28ம் தனிச்சிறப்புடையவை.

சில ஆகமங்களில் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பாதங்களும், சிலவற்றில் கிரியை மிகுந்து யோகம், ஞானம் சிறிதளவாகவும் உள்ளன. இவைகளின் இயல்புக்கேற்ப மஹாதந்திரங்கள் எனவும் ப்ரதிஷ்டா தந்திரங்கள் எனவும் அகோர சிவாச்சார்யார் பிரித்துள்ளார். ஸ்ரீமத் அகோர சிவாச்சார்யார் அளித்துள்ள யோகபாத வ்யாக்யானம் அடங்கிய ஸ்ரீமத் ஸர்வஜ்ஞானோத்தராகமம் என்ற நூல் தமிழுரையுடன் திருப்பரங்குன்றம் சிவஸ்ரீ ராஜா பட்டர் நிர்வகித்து வரும் வேதசிவாகம பாடசாலையின் ஆண்டு விழாவில் வெளியிடப்படுவது கேட்டு மகிழ்வுறுகிறோம். இதனை அச்சிட சிவாகம வல்லுனராகிய விளங்கிய மானாமதுரை சிவஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பட்டரின் பேரன் தெ.ராஜேஷ் என்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்துக் கொண்டது பாராட்டுதற்குரியது. இதுபோல் ஒவ்வொருவரும் ஆகமங்களை ஆராய்ந்து சிவஞானம் பெற்று இறைவன் அருளால் சமூகத்திற்குச் சிவ புண்ணியம் சேர்க்கும் செயலில் ஈடுபட மீனாக்ஷி சுந்தரேசப்பெருமானையும் காமாக்ஷி நாதரையும் ப்ரார்த்திக்கிறோம்.

இந்நூல் சிவபெருமானால் ஞானஸ்கந்தனுக்கு உபதேசித்ததாகக் கூறுகிறது. யோகபாதத்தில் அஷ்டாங்கம் என்றும் ஷடங்கம் என்றும் இரண்டுவகையுண்டு. அஜிதம்,ரௌரவம் முதலிய மூலாகமங்களிலும் மதங்கபாரமேஸ்வரம் முதலிய உபாகமங்களிலும் சிலவற்றில் அஷ்டாங்கமும், சிலவற்றில் ஷடங்கமும் விளக்கப் பெற்றுள்ளன. அதனையொட்டியே இந்த ஸர்வஜ்ஞானோத்தராகமத்தில் ஷடங்கயோகம் விளக்கப்பட்டுள்ளது என்று அறியலாம். இச்சிறப்பு நிகழ்ச்சியில் பங்குபெறும் ஒவ்வொருவரும் ஞானக்கடவுளாகிய முருகப்பெருமானின் கருணைக்கு பாத்திரராகி சீரும் சிறப்புமாக பூரணஞானத்துடன் விளங்க வாழ்த்தி நிறைவு செய்கிறோம்.

எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்
யாதினும் அரிதுஅரிதுகாண்:
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ?
ஏதுவருமோ ? அறிகிலேன் :
கண் அகல் நிலத்துநான் உள்ளபொழுதே அருள்
ககனவட் டத்தில் நின்று,
கால் ஊன்றி நின்றுபொழி ஆனந்த முகிலோடு
கலந்துமதி அவசம் உறவே
பண்ணுவது நன்மை இந் நிலையுபதியு மட்டுமே
பதியாய் இருந்ததேகப்
பவுரிகுலை யாமலே, கௌரிகுண் டலி ஆயி
பண்ணவிதன் அருளினாலே,
விண்நிலவும் மதிஅமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவேன் உமதுஅடிமைநான்:
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!

- தாயுமானவர்

பதிப்புரை

ஸ்ரீ அகோர சிவாச்சார்ய ஸ்துதி

மேலான பரமுரைத்த மேன்மைமிகு ஆகமங்கள்
நூலாம் வகை செய்த நுண்மதியன் ஆதிசைவன்
சோணாடீந்த சீர் அகோரசிவத்தின் பதம்
வாணாள் முழுதும் வணங்கித் துதி செய்வோம்.

- முறசை சுந்தரேச சிவம்

அநாதியே ஆணவமலத்தால் கட்டுண்ட உயிர்கள் மேல் கொண்ட பெருங்கருணையாலே இறைவனால் அருளப்பட்டவையே வேதசிவாகமங்கள் ஆகும். இந்த ஆகமங்கள் சர்யா, க்ரியா, யோகம், ஞானம் என நான்கு பாதங்களால் பதி, பசு, பாசம் என்னும் பதார்த்தங்களை விளக்குகின்றன. வாயவ்யஸம்ஹிதா என்னும் நூலில் சிவபெருமான் அம்பிகைக்கு கூறுமுகமாக அமைந்துள்ள நான்கு சுலோகங்கள் நான்கு பாதங்களையும் சுருக்கமாக விளக்குகின்றது.

[1]चतुष्पादः समाख्यातो मम धर्मः सनातनः ।
ज्ञानं क्रिया च चर्या च योगश्चेति सुरेश्वरि ।।
पशुपाशपतिज्ञानं ज्ञानमित्यभिधीयते ।
षडध्वशुद्धिर्विधिना गुर्वधीना क्रियोच्यते ।।
वर्णाश्रमप्रयुक्तस्य मयैव विहितस्य च ।
ममार्चनादिधर्मस्य चर्या चर्येति कथ्यते ।।

---

1 ப்ரபா வ்யாக்யானத்தின் பூமிகா பக்கம் 2

मदुक्तेनैव मार्गेण मय्यवस्थितचेतसः ।
वृत्त्यन्तरनिरोधो यो योग इत्यभिधीयते ।।

இவற்றுள் சர்யா க்ரியாத்மகமான விஷயங்கள் அனுஷ்டானத்தில் இருப்பதால் இவ்விஷய ஞானம் மாணவர்களிடத்தில் காணப்படுகிறது. [2]நான்கு பாத விஷயங்களும் பூர்ணமாக இருப்பவனே ஆசார்யனாகும் தகுதியுடையவன் என்று ஆசார்யாபிஷேக விதி கூறுகின்றது. யோக ஞானாத்மகமான விஷயங்களின் உபதேச பரம்பரை விச்சின்னமான காரணத்தால் தான் அவற்றைப் பற்றிய ஞானம் மாணவர்களிடத்தில் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. இக்குறையை நீக்கி மாணவர்களை மிகச்சிறந்த ஆசார்யர்களாக்கி ஆகமங்களைக் காப்பாற்றி லோக க்ஷேமத்திற்கு வழிவகுக்க வேண்டும். அதற்கு ஆகமங்களின் யோக ஞான பாதங்களும் இவ்விஷயங்களை ப்ரதிபாதிக்கின்ற ப்ரகரண க்ரந்தங்களும் வெளிவரவேண்டும். அவற்றை தகுந்த ஆசார்யர்களைக் கொண்டு மாணவர்களுக்கு உபதேசித்து பழைய [3]ஸம்பிரதாயங்களை புனருத்தாரணம் செய்ய வேண்டும். உபதேச பரம்பரையில்லாமல் வெறும் நூல்கள் மட்டும் இருந்தால் அதுவும் பயனற்றதே ஆகும். இவ்விஷயங்களை பல்வேறு அறிஞர்களுடன் கலந்தாலோசித்ததன் பயனாக இன்று முதல் முறையாக ஸ்ரீமத் ஸர்வஞானோத்தராகமத்தின் யோக பத்மமானது மலர்கிறது. இதுபோன்று மற்ற நூல்களும் வெளிவர கருணைக்கடல் சிவபெருமானை வேண்டுகிறோம்.

---

[2] त्रिपदार्थां चतुष्पादां भुक्ति मुक्ति फलप्रदाम् ।
संहितां यो विजानाति शिष्योऽसौ सेकमर्हति ॥

[3] ஆமர்தகம் முதலான சித்தாந்தசைவ மடங்களின் ஆசார்ய பரம்பரை

யோகபாத நூல்கள்

இதுவரை வெளிவந்துள்ள ஆகமங்களுள் [4]ஸ்ரீமத் சுப்ரபாதம், [5]ஸ்ரீமத் கிரணம், [6]ஸ்ரீமந் ம்ருகேந்த்ரம், [7]ஸ்ரீமந் மதங்கபாரமேஸ்வரம் ஆகியவற்றில் மட்டுமே யோக பாதம் உள்ளது. ஸ்ரீமத் ஸர்வஞானோத்தரத்தின் யோகபாதம், ஒரு படலம், ஸ்ரீமந் காமிக யோகபாதம் ஆத்மபூஜா படலம் என இரண்டு [8]சுவடிகள் உள்ளன. மற்ற ஆகமங்களின் யோகபாதம் கிடைக்கவே இல்லை. ப்ரகரண க்ரந்தங்களுள் ப்ரதிஷ்டாவிதி (பூதசுத்தி ப்ரகரணம்), [9]ஸித்தாந்த ஸாராவளி, [10]ஸித்தாந்த சேகரம், [11]சிவபூஜா ஸ்தவம் ஆகிய நூல்களில் யோகப்ாத விஷயங்கள் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஸ்ரீமத் ஞானப்ரகாசர் (ஸர்வஞானோத்தரம், தேவிகாலோத்தரம், ஸ்கந்த காலோத்தரம் ஆகிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு) [12]சிவயோக ரத்னம், [13]சிவயோகஸாரம் என இரு நூல்களை இயற்றியுள்ளார். வேறு எதுவும் சிவாகமங்களின் யோகபாத விஷயமான நூல்கள் கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஸ்ரீமத் ஸர்வஞானோத்தரம்

இது மூல உபாகமங்களுள் இல்லை. ஸர்வ ஆகமங்களின் ஸாரபூதமாக இருப்பதால் இந்த ஆகமம் ஸர்வஞானோத்தரம்

---

[4] மயிலை அழகப்ப முதலியார் வெளியீடு கலி 5030

[5] சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, 1932

[6] Madhusudankaul Sastri, KSTS 50, Srinagar, 1930

[7] N.R Bhatt, French Institute , pondicherry ,1982

[8] French Institute , pondicherry, manuscripts

[9] தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், 1975

[10] சீதாராமசோமயாஜி, மைசூர், 1971

[11] சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, 1925

[12] Tara Michael, French Institute Pondicherry, 1975

[13] திரு கைலாசபிள்ளை, நல்லூர், யாழ்ப்பாணம்,1929

எனப் பெயர் பெற்றது. காமிகாதி ஆகமங்கள் சிவபெருமானால் ரிஷிகளுக்கு உபதேசம் செய்யப்பட்டன. ஆனால் இந்த ஆகமமானது சிவபெருமானால் முருகப்பெருமானுக்கு உபதேசம் செய்யப்பட்டது. அதனால் இந்த ஆகமத்திற்கு ஒரு மஹத்வம் உண்டு. இவ்வாகமத்திற்கு ஸ்ரீமத் அகோரசிவத்தின் உரை உள்ளது. இவ்வாகமத்தின் [14]ஞானபாதத்திற்கு தமிழ்மொழி பெயர்ப்பு (செய்யுள் வடிவில்) ஒன்றும் உள்ளது. இப்பொழுது இவ்வாகமத்தின் யோகபாதத்தை முதன்முறையாக ஸ்ரீமத்அகோரசிவத்தின் வ்ருத்தியுரையுடன் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பயனளிக்கும் வண்ணம் பாண்டிச்சேரி French Institute, டாக்டர் ஸ்ரீ T. கணேசன் அவர்களின் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்கூடிய விரிவான முன்னுரையுடனும், பல சுவடிகளை ஒப்புநோக்கிய பாடபேதங்களுடனும் தமிழில் பொழிப்புரையுடனும் வெளியிடுகிறோம். அன்பர்கள் வாங்கி பயனடைய வேண்டுகிறோம்.

நூல் வெளியிடும் பணியில் எங்களுக்கு ஆசானாகவும், ஆலோசகராகவும் இருந்து எங்களை வழிநடத்தும் சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரிப் பேராசிரியர் சிவாகமப் ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி சிவஸ்ரீ சே. அருணசுந்தர சிவாச்சாரியார் அவர்களுக்கும், பாண்டிச்சேரி French Institute நிறுவனத்தின் முதுநிலை சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர் டாக்டர் ஸ்ரீ T. கணேசன் அவர்களுக்கும் எங்களது நமஸ்காரங்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். சைவாகமத்தில் அவர்களுக்கு உள்ள ஞானத்தினை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறோம். இவர்களைப் போல பண்பாளர்களின் சேவை சைவ உலகுக்குத் தேவை.

---

[14] பொ. முத்தையா பிள்ளை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, 1923

யோகபாத நூல்கள்

இதுவரை வெளிவந்துள்ள ஆகமங்களுள் [4]ஸ்ரீமத் சுப்ரபாதம், [5]ஸ்ரீமத் கிரணம், [6]ஸ்ரீமந் ம்ருகேந்த்ரம், [7]ஸ்ரீமந் மதங்கபாரமேஸ்வரம் ஆகியவற்றில் மட்டுமே யோக பாதம் உள்ளது. ஸ்ரீமத் ஸர்வஞானோத்தரத்தின் யோகபாதம் ஒரு படலம், ஸ்ரீமத் காமிக யோகபாதம் ஆத்மபூஜா படலம் என இரண்டு [8]சுவடிகள் உள்ளன. மற்ற ஆகமங்களின் யோகபாதம் கிடைக்கவே இல்லை. ப்ரகரண க்ரந்தங்களுள் ப்ரதிஷ்டாவிதி (பூதசுத்தி ப்ரகரணம்), [9]ஸித்தாந்த ஸாராவளி, [10]ஸித்தாந்த சேகரம், [11]சிவபூஜா ஸ்தவம் ஆகிய நூல்களில் யோகபாத விஷயங்கள் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஸ்ரீமத் ஞானப்ரகாசர் (ஸர்வஞானோத்தரம், தேவிகாலோத்தரம், ஸ்கந்த காலோத்தரம் ஆகிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு) [12]சிவயோக ரத்னம், [13]சிவயோகஸாரம் என இரு நூல்களை இயற்றியுள்ளார். வேறு எதுவும் சிவாகமங்களின் யோகபாத விஷயமான நூல்கள் கிடைப்பதாகத் தெரியவில்லை.

ஸ்ரீமத் ஸர்வஞானோத்தரம்

இது மூல உபாகமங்களுள் இல்லை. ஸர்வ ஆகமங்களின் ஸாரபூதமாக இருப்பதால் இந்த ஆகமம் ஸர்வஞானோத்தரம்

---

4 மயிலை அழகப்ப முதலியார் வெளியீடு கலி 5030

5 சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, 1932

6 Madhusudankaul Sastri, KSTS 50, Srinagar, 1930

7 N.R Bhatt, French Institute , pondicherry ,1982

8 French Institute , pondicherry, manuscripts

9 தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், 1975

10 சீதாராமசோமயாஜி, மைசூர், 1971

11 சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, 1925

12 Tara Michael, French Institute Pondicherry, 1975

13 திரு கைலாசபிள்ளை, நல்லூர், யாழ்ப்பாணம்,1929

எனப் பெயர் பெற்றது. காமிகாதி ஆகமங்கள் சிவபெருமானால் ரிஷிகளுக்கு உபதேசம் செய்யப்பட்டன. ஆனால் இந்த ஆகமமானது சிவபெருமானால் முருகப்பெருமானுக்கு உபதேசம் செய்யப்பட்டது. அதனால் இந்த ஆகமத்திற்கு ஒரு மஹத்வம் உண்டு. இவ்வாகமத்திற்கு ஸ்ரீமத் அகோரசிவத்தின் உரை உள்ளது. இவ்வாகமத்தின் [14]ஞானபாதத்திற்கு தமிழ்மொழி பெயர்ப்பு (செய்யுள் வடிவில்) ஒன்றும் உள்ளது. இப்பொழுது இவ்வாகமத்தின் யோகபாதத்தை முதன்முறையாக ஸ்ரீமத்அகோரசிவத்தின் வ்ருத்தியுரையுடன் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பயனளிக்கும் வண்ணம் பாண்டிச்சேரி French Institute, டாக்டர் ஸ்ரீ T. கணேசன் அவர்களின் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்கூடிய விரிவான முன்னுரையுடனும், பல சுவடிகளை ஒப்புநோக்கிய பாடபேதங்களுடனும் தமிழில் பொழிப்புரையுடனும் வெளி-யிடுகிறோம். அன்பர்கள் வாங்கி பயனடைய வேண்டுகிறோம்.

நூல் வெளியிடும் பணியல் எங்களுக்கு ஆசானாகவும், ஆலோசகராகவும் இருந்து எங்களை வழிநடத்தும் சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரிப் பேராசிரியர் சிவாகமப் ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி சிவஸ்ரீ சே. அருணசுந்தர சிவாச்சாரியார் அவர்களுக்கும், பாண்டிச்சேரி French Institute நிறுவனத்தின் முதுநிலை சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர் டாக்டர் ஸ்ரீ T. கணேசன் அவர்களுக்கும் எங்களது நமஸ்காரங்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். சைவாகமத்தில் அவர்களுக்கு உள்ள ஞானத்தினை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறோம். இவர்களைப் போல பண்பாளர்களின் சேவை சைவ உலகுக்குத் தேவை.

---

[14] பொ. முத்தையா பிள்ளை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை, 1923

நன்றி

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய தேனி வேதபுரீ பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளுக்கும், காஞ்சிபுரம் சிவாகம ரத்னாகரம் சிவஸ்ரீ சாஸவ. ராஜப்பா சிவாச்சார்யார், பிள்ளையார்பட்டி சிவநெறிச் செம்மல் டாக்டர் சிவஸ்ரீ கி. பிச்சை சிவாச்சார்யார், திருபரங்குன்றம் சிவாகம சிரோமணி சிவஸ்ரீ க. ராஜா பட்டர், மயிலாடுதுறை சிவாகப் ப்ரவீணர் சிவஸ்ரீ ரவிஸ்வாமிநாத சிவாச்சார்யார் அவர்களுக்கும் மற்ற அலுவல்களை கவனித்துக் கொண்ட மானாமதுரை வ்யாகரண சிரோமணி சிவஸ்ரீ தெ. ராஜேச சிவம், திருநெல்வேலி சிவாகம பாஸ்கர சிவஸ்ரீ பால. சுகுமார சிவம் அவர்களுக்கும், ஸ்ரீ ஸ்கந்த குரு வித்யாலயத்தின் மாணவச் செல்வங்களுக்கும், நூலை நல்ல முறையில் வடிவமைத்து அச்சிட்டுத் தந்த ஸ்ரீதுர்கா இந்திய ஆய்வியல் நிறுவனத்தாருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

25.01.05

சென்னை

அன்புடன்

க. கார்த்திகேயசிவம்

முன்னுரை

சைவ ஆகமங்கள் மூலாகமங்கள், அதன் அடிப்படையில் எழுந்த உபாகமங்கள் என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டவை; மூலாகமங்கள் 28 என மிகப் பண்டைய காலத்திலிருந்தே சைவ ஆசாரியர்களால் கொள்ளப்பட்டு வந்துள்ளன. பெரும்பாலும் உபாகமங்களைப் பற்றி சாத்திரங்களிலும் ஆசாரியர்கள் இயற்றிய நூல்களிலும் விரிவான கருத்துக்கள் காணப்படவில்லை. இராமகண்டர் தன்னுடைய மிருகேந்திராகம வித்தியாபாத உரைத் தொடக்கத்தில் இந்திரன் விஷ்ணுவைப் பூஜித்து அவரருளால் நாரஸிம்ஹமென்னும் கவசத்தைத் தரித்துக் கொண்டு ஸ்ரீகண்டராகிய உமாபதியினிடமிருந்து இவ்வாகமத்தைக் கேட்டதால் இதற்கு மிருகேந்திரம் (மிருகங்களுக்குள் சிறந்ததான சிங்கத்தின் உருவக்கவசம்) எனப் பெயர் வழங்குவதாகக் கூறுகிறார். எனினும், காமிகாகமத்தின் உபபேத (உபாகம) வரிசையில் நாரஸிம்ஹமென்றே பெயர் காணப்படுகிறது; மிருகேந்திரமென்னும் பெயர் காணப்படவில்லை. அவ்வாறே 28-வது மூலாகமமாகிய வாதுலாகமத்தின் உபாகமமாக இந்த ஸர்வஜ்ஞா னோத்தராகமம் காணப்படா விடினும், இதை அவ்வா கமத்தின் உபபேதங்களுள் ஒன்றான காலோத்த ராகமத்தின் பிரிவாகப் பெரியோர் கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது. மற்றொரு முக்கிய காரணம், காலோத்தராகமங்களைப் போன்றே ஸர்வஜ்ஞானோத்தரமும் ஸ்ரீகண்டபரமேசுவரனால் ஷண்முகனாகிய முருகப் பெருமானுக்கு உபதேசிக்கப்படுகின்றது.

ஸர்வஜ்ஞானோத்தராகமம், வித்தியா, கிரியா, சரியா, யோகம் என்னும் நான்கு பிரகரணங்களைக் கொண்டது;

பாதங்களைப் பிரகரணங்கள் என்பது இவ்வாகமத்தில் காணப்படும் தனிச் சிறப்பு. மேலும், சரியாபாதத்தில் சந்நியாசிகளுக்கும் யோகிகளுக்கும் உரியதான கமண்டலுவைச் சுத்தம் செய்தல், அதைக் கைக்கொள்ளுதல், அந்தக் கமண்டலுவை பக்தியுடன் காத்தல் ஆகியன கமண்டலு படலத்தில் விளக்கப்படுவதாலும், இவ்வுலக இன்பங்களினின்றும் பற்று நீங்கியவனாய் வைராக்கியமுடையவனாயிருப்போனே இந்த யோகபாதத்தில் விளக்கப்படும் முக்கிய யோகாப்பியாசங்களை அனுஷ்டிப்பதற்குரிய தகுதியுடையோன் என்றும் உரையாசிரியர் கூறுவதாலும் இந்த ஸர்வஜ்ஞானோத்தராகமம் சிறப்பாகச் சைவ யோகிகளுக்காகவும் துறவறத்தைக் கடைப்பிடிப்போருக்காகவும் சிவபெருமானால் அருளப்பட்டிருக்கலாமெனத் தோற்றுகிறது. அவ்வாறே, மதங்கபாரமேசுவராகமத்தின் கிரியாபாதத்தில் ஸாதகதீக்ஷை பெற்றவனுக்கேற்ற தீக்ஷை வகைகளும், விரதம் முதலிய சரியைகளும் அவன் தன்னுடைய மந்திர சாதனைக்குத் தேவையான ஆலயம் அமைத்து, அதில் லிங்கம் முதலியவற்றைப் பிரதிஷ்டை செய்வதற்கான பிரதிஷ்டா விதிகளும் கூறப்படுவதாலும் அவ்வாகமம் ஸாதகர்களுக்காவே அருளப்பட்டது எனத் தெரிகிறது என்று மதங்கபாரமேசுவரா கமத்தின் முன்னுரையில் காண்கிறோம்[1]. தற்காலத்தில் ஆசாரியனுக்கு அவருடைய கிரியைகளில் உதவி செய்பவரே ஸாதகன் என்று அழைக்கப்படுகிறார். ஆகமங்களில் விரித்துக் கூறப்படும் ஸாதகதீக்ஷை என்னும் விசேஷமான தீக்ஷையைப் பெற்ற ஸாதகன் தற்காலத்தில் இல்லையென்றே கொள்ளலாம்.

---

[1] மதங்கபாரமேசுவராகமம் (கிரியாபாதம், யோகபாதம், சரியாபாதம்), இராமகண்டாசாரியரின் விருத்தியுடன் கூடியது, பல சுவடிகளை ஒப்புநோக்கிய பதிப்பு, பதிப்பாசிரியர், N. R. Bhatt, பதிப்பு: French Institute, Pondicherry, 1982, பக்கங்கள் 96-97.

இனிச் சைவயோகத்தைப் பற்றிச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

ஸுப்ரபேதம், கிரணம், மிருகேந்திரம், மதங்கபார மேசுவரம், ஸர்வஜ்ஞானோத்தரம், சிந்தியம், ஸார்த்ததிரிசதிகாலோத்தரம், மகுடம், ஆகிய ஆகமங்களில் தனியாக யோகபாதம் காணப்படுகிறது; அசிந்தியவிசுவஸாதாக்கியம் என்னும் ஆகமத்தில் தனிப்படலத்திலும், அதன் அடிப்படையில் நிகமஞானதேசிகர் இயற்றிய தீக்ஷாதர்சம் என்னும் மிக விரிவான பத்ததி நூலிலும் யோகதீக்ஷை செய்யும் முறை விளக்கப்படுகிறது. வாயு ஸம்ஹிதையின் உத்தரபாகத்திலும் சைவயோகம் விளக்கிக் கூறப்படுகிறது.

சைவ ஆகமங்களில் கூறப்படும் யோகம்

இனி, மேற்கூறப்பட்ட ஆகமங்களில் விளக்கப்படும் சைவயோகத்தைப் பற்றிய செய்திகளைச் சுருக்கமாகக் காண்போம்:

ஸார்த்ததிரிசதிகாலோத்தரத்தில் பத்து, பதினொன்று, பதினெட்டு, பத்தொன்பது, இருபத்தொன்று, இருபத்துநான்கு ஆகிய படலங்கள் சைவயோகத்தைப் பற்றிய செய்திகளைக் கொண்டவை (காலோத்தராகமத்தின் சுருக்கமான இது 350 சுலோகங்கள் உடையது). மனித உடலிலமைந்துள்ள நாடிசக்கரம், 72,000 நாடிகள் உடலெங்கும் நீக்கமற வியாபித்திருத்தல், அவற்றுள் இடா, பிங்கலா, ஸுஷும்நா, காந்தாரீ, ஹஸ்திஜிஹ்வா, பூஷா, யசா, அலம்புஷா, குஹூ, சங்கிநீ ஆகிய பத்து நாடிகளின் முக்கியத்துவம், அவற்றின் அடிப்படைத்தன்மை ஆகியனவும், அணிமா முதலிய எண்வகைச் சித்திகளை அடையும் பொருட்டுச் செய்யவேண்டிய பாவனை எனப்படும் தியானம், அதற்கு இன்றியமையாததாக அமைந்த மேற்கூறிய நாடிகளைப் பற்றிய ஞானமும், பிராணன், அபானன், ஸமானன், உதானன், வியானன்,

நாகம், கூர்மம், கிருகரம், தேவதத்தன், தனஞ்ஜயன் என்னும் பத்துவித பிராணவாயுக்களின் தொழில்கள் பற்றிய விரிவான விளக்கங்களும், பிரதான நாடிச் சக்கரமென வழங்கப்படும் பத்து ஆரங்களையுடைய இதயகமலம், அதில் நிவிருத்தி முதலிய நான்கு சக்திகளுடன் சிவபெருமான் வீற்றிருத்தல், இந்த நாடிசக்கரத்தில் புரியஷ்டகம் எனப்படும் ஜீவன் இடைவிடாது சஞ்சாரம் செய்தல் ஆகியன பத்தாம் படலத்தில் கூறப்படும் செய்திகள். ஆத்தியாத்மிக காலம், அக்காலத்தில் ஜீவனால் செய்யத்தகுந்தவை, செய்யத்தகாதன முதலியவற்றையும், இடா முதலிய நாடிகளில் பிராணன் ஆகியவற்றின் சஞ்சாரங்களையும், பூரகம் கும்பகம், ரேசகம் ஆகிய பிராணாயாமத்தின் அங்கங்களையும், அவற்றின் செய்முறைகளையும், பிராணன் முதலியவற்றினின்றும் அவற்றை இயக்கும் ஜீவன் வேறுபட்டிருக்கும் தன்மையையும் பதினொன்றாம் படலம் விளக்குகிறது. பலவித நன்மைகளைப் பயக்கும் காலங்களின் சேர்க்கையாகக் கருதப்படும் கால சக்கரம், அதில் ஜீவன் குறிப்பிட்ட காலம் யோகசக்தியின் மூலம் இருத்தல் ஆகியன பதினெட்டாம் படலம் கூறும் செய்திகள். பத்தொன்பதாவது படலத்தில் பிராஸாத மந்திரத்தின் எட்டு வகைகளான ஸகலம், நிஷ்கலம், சூன்யம், கலாட்யம், கமலங்கிருதம், க்ஷபணம், அந்தஸ்தம், கண்டோஷ்டியம், ஆகியவற்றைப் பற்றிய விளக்கம், அம்மந்திரத்தை ஜபம் செய்வதால் விளையும் உயர்ந்த நன்மைகள் முதலியன கூறப்படுகின்றன.

இருபத்தொன்றாம் படலத்தில் யோகஸாதனை செய்பவனுக்கு அணிமா முதலிய ஸித்திகள் கைவருவதற்கான சூசகங்களாக எட்டுப் பிரத்தியயங்கள் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. பிராஸாத மந்திரத்தை இடையறாது ஜபம் செய்துவரும் யோகியானவன் தன்னுடைய இதயகமலத்தில் நிவிருத்தி முதலிய நான்கு சக்திகலைகளுடன் கூடிய

சிவபெருமானைத் தியானித்து பிராஸாத மந்திரத்தின் ஸ்வரூபத்தையும் தியானித்து, கும்பகம் முதலிய பிராணாயாமங்களை இயற்றி, அங்கநியாஸம் ஆகியன செய்து, ஆகமங்களில் அர்ச்சனாவிதியில் கூறப்பட்டவாறு சிவபெருமானை அர்ச்சனை செய்யவேண்டிய முறைகள் இருபத்துநான்காம் படலத்தில் விளக்கப்படும் செய்திகளாகும்.

த்விசதிகாலோத்தரம் (காலோத்தராகமத்தின் சுருக்கம், 17 படலங்களும் 200 சுலோகங்களுமுடையது; இதற்கு அகோரசிவாசாரியாரியற்றிய உரையும் உள்ளது; ஆகமமும் உரையும் இதுவரை வெளியாகவில்லை.)[2] மேற்சொன்ன திரிசதிகாலோத்தரத்தில் கூறப்படும் செய்திகளையே பெரும்பாலும் அதே சுலோகங்களில் விளக்குகிறது.

சிந்தியாகமம் (இதுவரை பிரசுரிக்கப்படாதது) ஸமாதி லக்ஷணம் என்னும் படலத்தில் ஜாக்கிரம், ஸ்வப்னம், முதலிய அவத்தைகளின் இலக்கணத்தையும், பிருதிவீ முதல் க்ஷேத்திரஜ்ஞன் ஈறாக உள்ள 35 தத்துவங்களில் ஜாக்கிர அவத்தையும், சப்தம், வசனம் முதலிய செயல்களும், பிராணன் ஆகியவற்றின் செயல்களும் ஸ்வப்ன அவத்தையில் செயல்படுவதையும், ஸுஷுப்தியில் க்ஷேத்திரஜ்ஞனான ஜீவன் மனம், பிராணன் ஆகியவவற்றுடன் கூடியிருத்தல், துரீயம், துரீயாதீதம் ஆகிய அவத்தைகளின் செயல்பாடுகள், ஸமாதியின் உண்மைச் சொரூபம், அதில் ஆனந்தமாகிய பிரம்மத்தை அனுபவித்தல், ஆகிய செய்திகளையும் விளக்குகிறது.

ஸமாதிராஜபடலம் ஸந்தியா காலத்தில் சிவலிங்கார்ச்சனையை இயற்றிவிட்டுப் பிறகு ஆசாரியனானவர் நற்குணங்களுடையவனும்

---

2 பாண்டிச்சேரியிலுள்ள French Institute ல் இவ்வாகமமும் உரையும் அடங்கிய கையெழுத்துப் பிரதிகள் உள்ளன.

யோகாப்பியாசத்தில் பற்றும் ஈடுபாடும் கொண்டவனுமான சிஷ்யனுடன் யோகாப்பியாசத்தை மேற்கொள்ளுதல், சௌசம் முதல் ஆனந்தம் ஈறான 27 அங்கங்கள் கொண்ட யோகம், குருவடிவில் இலங்கும் சிவபெருமானைத் தியானித்தல், ஆத்மதத்துவம் முதல் பிந்து ஈறான தத்துவங்களைப் பாவித்தல், மூலாதாரம் தொடங்கி பிரம்மரந்திரம் வரை ஒவ்வொன்றிலும் வாமா முதலான சக்திகள், ஷண்முகன் முதலிய தேவதைகள் ஆகியவற்றின் சொரூபத் தியானம், பின்னர் அகாரம் முதல் க்ஷகாரம் ஈறான மாத்ருகாக்ஷரங்களின் தியானம், மேற்படி யோகாப்பியாசத்தின் பலனான எல்லையற்ற ஆனந்தம், அணிமா முதலிய எண்வகைச் ஸித்திகள் கைவரப்பெறுதல், ஆகாயத்தில் செல்லக்கூடிய வல்லமை, எல்லாவற்றையும் அறிதல் முதலிய சித்திகள் முதலிய செய்திகளைக் கொண்டது[3].

மதங்கபாரமேசுவராகமத்தின் யோகபாதம் 7 படலங்களுடையது; யோகத்தின் அங்கங்கள், நாடிகளைச் சுத்தம் செய்தல், பிராணாயாமம், தியானம் ஆகிய செய்திகள் இவ்வாகமத்தில் சற்று விரிவாகவே விளக்கப்படுகின்றன.

முதல் படலத்தில் ஆன்மாவிற்கு அதற்கே உரியதும் ஆணவமலத்தால் மறைப்புண்டதுமான சிவத்துவத்தைப் பிரகாசிக்கச் செய்வதற்கு யோகாப்பியாசம் இன்றியமையாதது என்பதும், பிரத்தியாஹாரம், தியானம், பிராணாயாமம், தாரணா, தர்க்கம், ஸமாதி என்னும் ஆறு அங்கங்களைக் கொண்ட சைவயோகச் சுருக்கமும் விளக்கப்படுகின்றன.

இரண்டாம் படலம் மேற்கூறிய ஆறு அங்கங்களின் விரிவான இலக்கணம், கும்பகம் முதலிய பிராணாயாம வகைகள்,

---

3 இந்த இரு படலங்களைப் பற்றிய செய்திகள் பாண்டிச்சேரி, French Institute ல் உள்ள T 13 என்னும் எண்ணுடைய சிந்தியாகமக் கையெழுத்துப்பிரதியை ஆதாரமாகக் கொண்டவை.

ஸமாதியினால் ஏற்படும் பலன்கள் ஆகியவற்றை விரித்துக் கூறுகிறது.

மூன்றாம் படலத்தில் யோகாப்பியாசம் செய்யத்தகுந்த இடம், தியானம் செய்யும் முறை, அதனால் உண்டாகும் நன்மைகளான மேலுலகத்தில் தெய்வீக ஒளிபொருந்திய உடலுடன் பல போகங்களை அனுபவித்தல் ஆகியன விளக்கப்படுகின்றன.

பிருதிவீ முதல் சிவம் ஈறான ஒவ்வொரு தத்துவத்தையும் தம் உடலில் பாவிப்பதனால் யோகியானவன் அந்தந்த தத்துவத்தை ஜயித்தல், அநுமானப் பிரமாணத்தின் வகைகள், ஐந்து தன்மாத்திரைகளையும் ஜயித்தல் அவற்றின் பலன் ஆகியன நான்காம் படலம் விளக்கும் செய்திகள்.

ஐந்தாம் படலத்தில் புருஷதத்துவத்தை ஜயிப்பதனால் விளையும் பலன், தீவிர தியானத்தினால் சுத்தாத்துவாவிலுள்ள போகங்களைப் புசித்தல், ஸதாசிவதத்துவம் சிவதத்துவம் ஆகியவற்றை அடையும்வழி, மோக்ஷத்தின் ஏழு நிலைகளான ஸதாசிவ, நிவிருத்தி, பிரதிஷ்டா, வித்தியா, சாந்தி, சாந்தியதீத, பரமசிவ என்னும் ஒன்றைவிட ஒன்று சிறந்து விளங்கும் புவனங்களை அடையும் முறை ஆகிய செய்திகள் விளக்கப் படுகின்றன. இந்த ஏழு நிலைகளிலுள்ளோர் மூர்த்திகேவலி, காமியர், சக்திகேவலி, யோககேவலி, ஞானகேவலி, நிரீசுவரர் போன்ற பெயர்களில் வழங்கப்படுகின்றனர். இறுதி நிலையான நிரீசுவரர்கள் எனப்படுவோர் காரியம் காரணம் என்னும் நிலைகளைக் கடந்து சிவபெருமானைப் போன்று எல்லா சக்திகளையும் குறைவறப்பெற்று அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டிய கட்டாயம் இன்றி முற்றிலும் சுதந்திரமாய் இருப்பவர்கள்.

ஆறாம் படலத்தில் யோகஸாதனை செய்பவர்கள் பிராணாயாமம் முதலியவற்றால் பிராணஜயம் செய்து அதன்

வாயிலாக உடல் அழகு, தெய்வீக ஒளி, பசி முதலியவற்றினின்றும் விடுதலை, கபம், வாதம், பித்தம் ஆகியவற்றினின் தொல்லைகளினின்றும் முற்றிலும் விடுதலை, உயர்ந்த ஞானம் ஆகிய பலன்களை அடைதல், தியானப் பயிற்சியினாலும் பற்பல மந்திர சித்தியினாலும் பலவித போகங்களை யோகஸாதகன் அனுபவித்தல் ஆகியன கூறப்படுகின்றன.

இயற்கையாகவே சலனமுடைய மனத்தை பிராணாயாமம், தியானம் முதலிய தீவிரப் பயிற்சியினால் கட்டுப்படுத்தி பிரஹ்மரந்திரத்திலுள்ள தாமரையில் கொண்டு சேர்த்தலாகிய உத்காதம் என்னும் யோகசித்தியும், அதன்மூலம் பரகாயப் பிரவேசம் ஆகியன, யோகசித்தியினால் மற்ற உயிர்கட்கு நன்மைகளைச் செய்தல், முடிவில் உலக வாழ்வில் மனம் நாடாது வைராக்கியமிகுதியினால் யோகி தன்னுடலைத் தியாகம் செய்தல் முதலியன ஏழாம் படலம் கூறும் செய்திகள்.

கிரணாகமத்தின் யோகபாதம் 7 படலங்களைக் கொண்டது; அந்தியேஷ்டி, சைவசிராத்தம் ஆகிய யோகத்தைச் சாராத 2 படலங்கள் இங்கு காணப்படுவது இவ்வாகமத்தின் தனிச்சிறப்பு. முதல் படலத்தில் அர்த்தசந்திரம், வீராஸனம், பரியங்காஸனம் முதலிய யோகாப்பியாஸத்திற்குத் தேவையான சில ஆஸனங்களின் செய்முறை, பூரகம் முதலான பிராணாயாமங்களின் செய்முறை, பலவகையான தாரணைகள், அவற்றுள் முக்கியமாக வஹ்நி ஸௌமியா, அமிருதா முதலிய நால்வகைகள், அவற்றின் விளக்கங்கள், அவற்றின் பயன்களான மூப்பு, இறப்பு ஆகியவற்றை ஜயித்தல் ஆகியனவும் விளக்கப்படுகின்றன[4].

---

[4] பிரசுரிக்கப்பட்ட கிரணாகமத்திலும், பாண்டிச்சேரி, French Institute ல் உள்ள கையெழுத்துப் பிரதியிலும் ஆகமத்தின் இப்பகுதி சிதைந்தும், பொருள் விளக்க மில்லாமலும் காணப்படுவதால் கிரணாகமத்தைப் பற்றிய மேற்கண்ட குறிப்பு பின்னர்த் திருத்தத்துக்குரியது.

காலோத்கிராந்தி என்னும் படலத்தில் மனிதர்கள், தேவர்கள் ஆகியோரின் கால அளவுகள், மாதங்கள் முதலியனவும், தகுந்த காலத்தில் யோகியானவன் நியாஸம் முதலியன செய்து அஷ்டபுஷ்பங்களைச் சிவபெருமானுக்கு அர்ப்பணித்துப் பின்னர் தன்னுடைய பிராணனைத் தியாகம் செய்யக்கடவன் என்பதையும் விளக்குகிறது. எண்வகைப் புஷ்பங்களாவன: வாரிஜம், ஸௌமியம், ஆக்னேயம், வாயவ்யம், பார்த்திவம், வானஸ்பத்தியம், பிராஜாபத்தியம், சிவபுஷ்பமென்பவையே அவை. பூஜையில் சமர்ப்பிக்கப்படும் நீர், சந்தனம், புஷ்பம், தூபம், நைவேத்தியமாக அளிக்கப்படும் அன்னம் முதலியன இவ்வெட்டுவகைப் புஷ்பங்களாகப் பிரிக்கப்படுவது இங்கு கூறப்படும் சிறப்புச் செய்தி. அவ்வாறு முறையாகப் பிராணனைத் தியாகம் செய்த யோகி பசுபாவம் முற்றிலும் நீங்கப்பெற்று சிவபாவத்தை அடைகிறான் என்றும், அவனுக்கு அந்தியேஷ்டி முதலியன செய்யவேண்டு மென்றும் இப்படலம் முடிவில் கூறுகிறது.

அடுத்த படலத்தில் அந்தியேஷ்டியும், அடுத்து சைவ சிராத்தமும் சுருக்கமாக விளக்கப்படுகின்றன. பிராயச்சித்தம், சிராத்தம், ஆகியவற்றைச் செய்யுங்கால் மிக இன்றியமையாததாக வேண்டப்படும் பஞ்சபிரஹ்ம மந்திரங்களின் உத்தாரம் சுருக்கமாகக் கூறப்படுகிறது. அடுத்து, இரண்டு நாட்களுக்கு உபவாசம் இருந்த கிருஹஸ்தர்களுக்குச் செய்யப்படும் லிங்கோத்தாரம்[5] என்னும்

[5] காலாமுகம், பாசுபதம் முதலிய மற்ற சைவப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், பௌத்தம் முதலிய மதங்களைப் பின்பற்றுவோர்களும் சைவசித்தாந்த மதத்தைத் தழுவ விரும்பினால் இந்த லிங்கோத்தாரமென்னும் கிரியை செய்யப்படவேண்டும் என்று ஸர்வ ஜ்ஞானோத்தரம், ஷட்ஸஹஸ்ரகாலோத்தரம் முதலிய ஆகமங்கள் கூறுகின்றன. இக்கிரியையைப் பற்றிய சற்று விரிவான செய்திகளை "மறைஞானசம்பந்தர் மற்றும் அவருடைய சீடர் நிகமஜ்ஞான தேசிகர் ஆகியோர்களின் அனைத்து நூல்களின் விரிவான ஆராய்ச்சி" என்னும் தலைப்பில் நான் மேற்கொண்டுள்ளதும் விரைவில் பதிப்பிக்கப்பட உள்ளதுமான ஆங்கில மொழியிலமையும் ஆராய்ச்சி நூலில் காணலாம்.

கிரியை மிகச் சுருக்கமாக விளக்கப்படுகிறது. மாத்ருகாநியாஸம் செய்யும் முறை இறுதிப் படலத்தில் கூறப்படுகிறது[6].

ஸுப்ரபேதாகமத்தின் யோகபாதம் 3 படலங்களைக் கொண்டது; நாடீசக்ரவிதி என்னும் முதல் படலம் சற்று விரிவாக அமைந்துள்ளது: அண்டஜம் முதலிய நால்வகைப் பிறப்புகள், மிருகம், பக்ஷி முதலியவற்றின் இலக்கணம், மனித உடலின் பாகுபாடு, அதன் அமைப்பு, ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களின் செயல்பாடுகள், கர்ப்பத்தில் கரு தோன்றியது முதல் பிறக்கும் வரை அதன் வளர்ச்சி, மனித மனதில் ஏற்படும் எண்ணங்களின் பாகுபாடு, உலகவாழ்வில் ஏற்படும் இன்பதுன்பங்கள், மனித உடலில் அமைந்துள்ள பத்துவிதமான நாடிகள், அவற்றின் இடம், செயல்கள் ஆகியன விரித்துக் கூறப்படுகின்றன.

அடுத்துள்ள காலசக்ரவிதியென்னும் படலம் காலப் பாகுபாடுபற்றி விளக்கமாக எடுத்துரைக்கிறது. ஸ்ருஷ்டிகாலம், ஸ்திதிகாலம், ஸம்ஹாரகாலம் என மூவகைப் பிரிவு, புராணங்களிலுள்ளவாறு ஸ்வாயம்புவம், ஸ்வாரோசிஷம் முதலான மனுக்கள், அவர்களின் கால பரிமாணம், உத்தராயணம், தக்ஷிணாயனம் ஆகிய காலங்கள், தேவர்களின் கால அளவு ஆகியவை இங்குக் கூறப்படும் செய்திகளுள் சில.

ஆஸனம், யோகபட்டிகா, அக்ஷமாலை, வேணுதண்டம், கமண்டலு என்னும் ஐவகைப்பட்ட யோக அங்கங்களும் அவற்றின் இலக்கணங்களும், பிராணாயாமத்தின் வகைகளும், அவற்றின்

---

6 முன்னர்க் கூறியவாறே அச்சிட்ட கிரணாகமம் பல இடங்களில் சிதைந்து பொருள் விளக்கமுறாமலிருப்பதால் யோகபாதச் சுருக்கத்தை எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் கூற இயலவில்லை. நாற்பாதங்களுடனான திருத்திய கிரணாகமப் பதிப்பு வெளிவந்த பிறகே அவ்வாகமத்தைப் பற்றிய பல செய்திகள் நன்கு விளங்கும்.

செய்முறைகளும் இறுதிப்படலமான ஆதார ஆதேயவிதியில் மிக விரிவாகக் கூறப்படுகின்றன.

மகுடாகமத்தில் விளக்கப்படும் யோகம் பதஞ்ஜலி முனிவரின் யோகசூத்திரத்தில் கூறப்பட்டுள்ளவாறு எட்டு அங்கங்களைக் கொண்டது[7]; கோமுகம், ஸ்வஸ்திகம், பத்மம், வீரம், அர்த்தசந்திரம் முதலிய ஆஸனங்கள் யோகாப்பியாசத்திற்கு ஏற்றவையாகக் கொள்ளப்படுகின்றன. தியானம் செய்வதற்குத் அடிப்படைத் தேவையாக மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களின் இருப்பிடம், அவற்றின் நிறம், உருவ அமைப்பு முதலியன விளக்கப்படுகின்றன. இந்த அறுவகை ஆதாரங்களுள் ஒவ்வொன்றிலும் அக்னி, ஆதித்தியன், முதலிய தேவதைகளைத் தியானிப்பதன் மூலம் அந்தந்த உலகங்களை அடையலாமென்றும், உச்சந்தலை முதல் பாதம் வரையிலும் ஈசுவரன் வியாபித்திருப்பதாகப் பாவித்து நெற்றி நடுவில் அவர் வீற்றிருப்பதாகத் தியானித்து, சிரஸின்மேல் நிருத்தம் செய்யும் நடராஜரைத் தியானிக்க வேண்டும் எனத் தியான முறை மற்ற ஆகமங்களினின்றும் சற்று வேறுவிதமாகக் கூறப்படுவதை இங்குக் காணலாம்[8]. பின்னர், தியானத்தின் ஸித்திகளாக அணிமா, மஹிமா முதலியனவும், முடிவில் ஹம்ஸமந்திரத்தின் தனிச்சிறப்பும், எல்லா மந்திரங்களுள்ளும் அது தலையாயதாக விளங்கும் சிறப்பும், அம்மந்திரத்தையே உச்சரித்துத் தியானிக்கும் முறையும் மகுடாகமத்தில் கூறப்படுகின்றன.

---

[7] மகுடாகமத்தைப் பற்றிய செய்திகள் பாண்டிச்சேரி, French Institute ல் உள்ள T. 248 என்னும் எண்ணுடைய கையெழுத்துப்பிரதியை ஆதாரமாகக் கொண்டவை.

[8] மகுடாகமத்தில் பல இடங்களில் நிருத்தமூர்த்தியின் மந்திரம், வழிபாடு, சிவபெருமானின் பலவடிவங்களுள் இம்மூர்த்தியின் தனிச் சிறப்பு ஆகியன விளக்கிக் கூறப்படுவதைக் காணலாம்.

மிருகேந்திராகமத்தின் யோகபாதம் ஒரே படலம் கொண்டது. அதனினும் சுருக்கமாக மிக முக்கியச் செய்திகளை ஸர்வஜ்ஞானோத்தராகமத்தின் யோகபாதம் 32 சுலோகங்களில் கூறுகிறது.

தீக்ஷை பெற்ற சாதகன் ஞானபாதப் பொருள்களான பதி, பசு, பாசம் ஆகியவற்றைப் பற்றிய தெளிவான அறிவு உடையவனானாலும் பிராணாயாமம், சமாதி முதலிய யோகப்பயிற்சிகளே அவனுடைய ஆன்மஞானத்தையும் சிவஞானத்தையும் உறுதியாக்குபவை; அவற்றின் மூலமே பாசங்களின் தொடர்பு நீங்கி, அனுபவஞானம் சிறந்து, முடிவில் தனக்கே உரியதும் என்றும் அழியாததுமான சிவானுபவம் ஏற்படும் என்று யோகபாதத்தின் முக்கியத்துவத்தை இராமகண்டர் தன்னுடைய மிருகேந்திராகமத்தின் யோகபாத வியாக்கியானத் தொடக்கத்தில் கூறுகிறார். ஸமயி, புத்ரகன், ஸாதகாசாரியன், அஸ்த்ராபிஷேகம் பெற்றவன் ஆகிய அனைவருக்கும் யோகபாதத்தில் விளக்கப்பட்டிருக்கும் பயிற்சி அவசியம் என்றும் அவர் கூறுகிறார்.

அடுத்து, சைவத்தில் யோகம் என்பது தியானிக்கப்படும் பொருளுக்கும் தியானம் செய்யும் ஆன்மாவிற்குமுள்ள நெருங்கிய தொடர்பே; பதஞ்ஜலி முனிவரின் யோக சூத்திரத்தில் கூறியவாறு ஆழ்ந்த தியானமான ஸமாதி அன்று. இதையே அகோரசிவாசாரியார் தன்னுடைய உரையில் வலியுறுத்துகிறார். எனவேதான், யோகம் என்ற சொல் தொடர்பு என்னும் பொருள்கொண்ட யுஜிர் என்னும் வடமொழி வினைமுதலிலிருந்து (धातु) தோன்றியதேயன்றி, ஸமாதி என்னும் பொருளுடைய யுஜ் என்னும் வினை முதலிலிருந்து தோன்றியதல்ல என்றும் அவர் விளக்குகிறார்[9].

---

9 இராமகண்டரும் தன்னுடைய மிருகேந்திராகமத்தின் யோகபாத உரையில் இக்கருத்தையே தெரிவிக்கிறார்.

பதஞ்ஜலி முனிவர் கூறும் யோகம் எட்டு அங்கங்களைக் கொண்டது[10]; மதங்கபாரமேசுவராகமம் ஆறு அங்கங்களைக் கொண்ட சைவயோகத்தையும்[11], மிருகேந்திராகமம் எட்டு அங்கங்களையும் கொண்ட சைவயோகத்தையும்[12] கூறுகின்றன. இவற்றில் இயமம், நியமம் ஆகியன யோகத்தின் அங்கங்களாகக் கொள்ளப்படாமல் தீக்ஷை பெற்றுக்கொண்டு சைவசாத்திரத்தில் கூறியவாறு ஒழுகுபவர்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைத் தருமங்களாகக் கூறப்பட்டுள்ளன. ஸர்வஜ்ஞானோத்தராகம யோகபாதத்தின் முதல் சுலோகமும் இதையே வலியுறுத்துகிறது. அதன்படி, மனதில் வைராக்கியமுடையவனும், இந்திரியங்களை அடக்கியவனும், எல்லாக் காரியங்களிலும் தகுந்த அளவிலும் முறைப்படியும் ஈடுபடுபவனும், அளவான உணவும் உறக்கமும் கொள்பவனே யோகப் பயிற்சி செய்யத் தகுதி உடையவன்.

யோகாப்பியாசத்திற்கேற்றதும் எளிமையானதுமான ஆசனங்களில் அமர்ந்து அவன் யோகப்பயிற்சி செய்ய வேண்டும். 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீகாழித் தத்துவப் பிரகாசர் இயற்றிய தத்துவப்பிரகாசமென்னும் சைவசித்தாந்த நூலில் யோகப்பயிற்சிக்குத் தேவையான பலவிதமான ஆசனங்களும் அவற்றின் செய்முறைகளும் விளக்கப்படுகின்றன.

---

[10] यमनियमासनप्राणायामप्रत्याहारधारणाध्यानसमाधयोऽष्टावङ्गानि । (யோக. சூ. II. 29).

சுப்ரபேதாகமும் இவ்வெட்டு அங்கங்களையே கூறுகிறது.

[11] प्राणायामस्तथा ध्यानं प्रत्याहारोऽथ धारणा ।

तर्कश्चैव समाधिश्च षडङ्गो योग उच्यते ॥ (மதங்க.யோக. பா.I.6)

[12] प्राणायामः प्रत्याहारो धारणाध्यानवीक्षणे ।

जपः समाधिरित्यङ्गान्यङ्गी योगोऽष्टमः स्वयम् ॥ (மிருகேந்திரம், யோக. பா. 3)

அடுத்து, இந்திரியங்களை அவற்றின் விஷயங்களினின்றும் நீக்கி மனதை ஒருமுகப்படுத்துதல் என்னும் பிரத்தியாஹாரம் விளக்கப்படுகிறது. பிராணாயாமத்தில் சகர்ப்பம், அகர்ப்பம் எனப்படும் இரண்டு வகைகளும், அவற்றைச் செய்யும் முறைகளும், அதன் காலப்பிரமாணம் ஆகியனவும் இவ்வாகமங்களில் விளக்கிக் கூறப்படுகின்றன. தியானம், மூலமந்திர உச்சாரணம் ஆகியவற்றுடன் கூடியது சகர்ப்பம் எனப்படும். இவை சைவயோகத்திற்கே உரியன; பதஞ்ஜலி யோகத்தில் இம்முறைகள் காணப்படவில்லை.

பின்னர் தாரணா -- தன்மாத்திரைகள், தத்துவங்கள் ஆகியவற்றின் மீது மனத்தை ஒருமுகப்படுத்தித் தியானித்தல் -- கூறப்படுகிறது. ஸர்வஜ்ஞானோத்தரா கமத்தில் இங்கு நாம் கவனிக்கவேண்டிய செய்தி யாதெனில் தாரணா, தியானம் முதலியன செய்யத் தொடங்கும் முன்னும், செய்யும்போதும் சிவமந்திரமாகிய மூலமந்திரத்தை மனதிற்குள் நன்கு உச்சரிக்க வேண்டும் என்பது. மிருகேந்திராகமம் முதலியவற்றில் இது ஜபம் எனத் தனியே கூறப்பட்டுள்ளது. மற்றொரு செய்தி: யோகாப்பியாசம் செய்யத் தொடங்கும் முன் சாதகன் சிவபெருமான் மற்றும் யோகாசாரியர் ஆகியோரை வணங்க வேண்டும் என்பது. தீக்ஷை, அஸ்திராபிஷேகம் ஆகியன செய்விக்கும் ஆசாரியரைத் தவிர யோகாப்பியாசத்தைக் கற்பிப்பதற்குத் தனியாக ஆசாரியர் இருந்தாரென ஊஹிக்கலாம். அல்லது, கூர்ம புராணம், லிங்கபுராணம், வாயு புராணம் முதலிய சைவபுராணங்களில் காணப்படும் சுவேதர் தொடங்கி லகுலீசர் ஈறான 28 யோகாசாரியர்களை வணங்குவதாகவும் இருக்கலாம்[13].

---

13 ஸர்வஜ்ஞானோத்தராகமத்தின் இரண்டு சுவடிகளில் योगाचार्यान् எனப் பன்மை காணப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது.

பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தாரணா முதலிய அங்கங்களைக் கொண்ட அங்கியானயோகமானது தியானிக்கப்படும் பொருளான சிவபெருமானை ஸாக்ஷாத்காரம் செய்தல் -- நேரிடையாக அனுபவித்து உணர்தல் -- என்று விளக்கி அதுவே யோகத்தின் முடிவு என இந்த யோகபாதத்தினின்றும் நாம் அறிகிறோம். இடையில், பிராணாயாமம், தாரணா, தியானம் ஆகியவற்றால் சாதகன் அடையும் பல நன்மைகளும் விளக்கப்படுகின்றன. தன்மாத்திரைகள், பிருதிவீ முதலான ஐம்பூதங்கள் எனத் தொடங்கி வித்தியேசுவரர்கள், சதாசிவர் ஈறாக ஒவ்வொன்றின் மீதும் தியானம் செய்து, அத்தத்துவங்களை எல்லாம் கடந்து முடிவில் சிவபெருமான் வரை அடைய வேண்டியது யோகசாதகனின் குறிக்கோள் என இந்த ஸர்வஜ்ஞானோத்தராகமத்தின் யோகபாதத்தில் விளக்கப்படும் முக்கியச் செய்திகள். அதன் வாயிலாக அவன் அடையும் பயன்களாவன: சிவபெருமானைப்போல் எல்லையற்ற ஞானமும், எங்கும் வியாபித்திருப்பதும், எல்லாவற்றையும் இயற்றும் அளவுகடந்த ஆற்றலும் வாய்க்கப்பெறுவான் என்பதே.

முடிவாக, பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுக்கும் மேலாகச் சிவபெருமான் என்னும் நான்காவதாக ஒரு பொருளும் இந்த ஸர்வஜ்ஞானோத்தராகமத்தில் கூறப்படும் தனிச் செய்தி.

அகோரசிவாசாரியாருடைய உரை மிகச் சுருக்கமாக அமைந்துள்ளது; மதங்கபாரமேசுவரம், மிருகேந்திரம் ஆகிய ஆகமங்களின் அடிப்படையிலேயே அவர் தன்னுடைய உரையை அமைத்துள்ளார் என்பதால் இம்மூன்று ஆகமங்களும் சைவ சித்தாந்தயோகத்திற்கு மிக இன்றியமையாத அடிப்படை நூல்கள்.

ஆகமங்களுக்கு உரை செய்த ஆசாரியர்களுள் அகோரசிவாசாரியாரே காலத்தால் பிற்பட்டவர்; அவருக்குப் பின்னர்

ஆகம உரையாசிரியர்கள் எவரும் தோன்றியதாகத் தெரியவில்லை; உரைகளும் கிடைத்தில (பௌஷ்கராகம உரையைத்தவிர); உரைசெய்யும் வழக்கமும் ஆசாரியர்களிடையே இருந்ததாகத் தெரியவில்லை. அஷ்டப் பிரகரணம் என வழங்கப்படும் சைவசித்தாந்த சாத்திர நூல்களிலும், தமிழ்நாட்டில் தோன்றிய சித்தாந்தப் பிரகாசிகை, சித்தாந்த தீபிகை (சித்தாந்தசாராவளியைத் தவிர) ஆகிய நூல்களிலும் சைவயோகத்தைப் பற்றிய செய்திகள் விளக்கப்படவில்லை. எனவே, சைவயோகம் குறித்த செய்திகள் சில நூற்றாண்டுகளாகச் சைவசாதகர்களுக்கு அதிகமாகக் கிடைக்க வாய்ப்பில்லை. கிரியாபாதச் செய்திகளுக்கும் ஞானபாதச் செய்திகளுக்கும் வழங்கப்படும் ஊக்கமும் அவற்றைப் பற்றிய ஆராய்ச்சியும் வாய்ப்பும் யோகபாதச் செய்திகளுக்குக் கிடைத்தில.

மெய்கண்டபரம்பரையில் ஞானத்திற்கும், யோகத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தும் அந்த யோகம் குண்டலினீ யோகத்தின் அடிப்படையில் எழுந்த பிராசாத யோகம் என வழங்கப்படுகின்றது[14].

பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய மிகப் புகழ் பெற்ற சைவ ஆசாரியர்களுள் ஒருவரான நிகமஞான தேசிகர் (மறைஞானதேசிகர்) 59 குறட்பாக்களாலான அட்டாங்க யோகக்குறள்[15] என்னும் சிறிய நூலில் எட்டு அங்கங்களைக்

---

[14] பிராஸாதஷட்கம், பிராஸாதசந்திரிகை ஆகியன இதை விளக்கிக் கூறும் நூல்கள்.

[15] இச்சிறுநூல் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயரால் பரிசோதிக்கப்பட்டுச் செந்தமிழ்ப் பிரசுரம் - 10 என்னும் எண்ணுடன் மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பாக 1923 ல் வெளியானது.

மு. அருணாசலம் தன்னுடைய 16ம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றின் 2ம் பாகத்தில் இந்நூல் மறைஞான தேசிகர் செய்ததெனத் தக்க ஆதாரங்களுடன் நிறுவுதல் இங்கு நோக்கத்தக்கது.

கொண்ட சைவயோகத்தைச் சுருக்கமாகவும் எளிதாகவும் விளக்குகிறார். இயமம், நியமம் ஆகியவற்றையும் நன்கு விளக்குகிறார்; தியானத்தைப் பற்றி விளக்குமிடத்து இவர் கூறும் செய்தி சுவையானது: காமுகனானவன் தன்னுடைய காதலியை எப்போதும் மனதில் நினைத்துக் கொண்டிருப்பது போல் கங்காளனாகிய சிவபெருமானின் கழல்களை நினைந்திருத்தலே தியானம்[1] என்பது. இதே கருத்து மதங்கபாரமேசுவராகமத்தின் யோகபாதம் இரண்டாம் படலத்தில் காணப்படுவது இங்கு நினைவுகூரத்தக்கது[2].

மேற்படி ஆகமங்களில் விரிவாகக் கூறப்படும் பிரத்தியாஹாரம், தாரணா, தியானம் ஆகியவற்றைப் பற்றிய ஞானமும், அவற்றை முறைப்படி அப்பியாசம் செய்தலும் மிகுதியும் வழக்கொழிந்து விட்டன. ஸர்வஜ்ஞானோத்தராகமத்தின் யோகபாதம்[3] அதற்கு அகோரசிவாசாரியாரியற்றிய உரை

---

[1] ஒண்டொடியைக் காமுகன்றா னுன்னுதல்போ லுள்ளத்துக்
கண்டிருகங் காளன் கழல். (அட்டாங்கயோகக்குறள், 45)

[2] लक्षं प्रत्यचला प्रीतिर्यथा रागबलेरणात्।
प्रलज्जन्नपि सौभाग्यशक्त्याकृष्टो निवारितः।
कान्तासक्तदृशं प्रीत्या न निवारयितुं क्षमः॥
(மதங்கபாரமேசுவராகமம், யோகபாதம், 2: 8a-9)

[3] முதன்முதலில் ஸர்வஜ்ஞானோத்தராகமத்தின் யோகபாதம் "ஸர்வஞானோத்தரம்: தஞ்சை பிரஹ்மநிஷ்டபண்டித வெ. குப்புஸ்வாமிராஜு என்னும் பூர்வாசிரமநாமம் கொண்ட பிரஹ்மானந்த ஸ்வாமிகளால் மொழிபெயர்க்கப்பட்டு தஞ்சை பிரஹ்மஸ்ரீ சுப்ரமணியசாஸ்திரிகளால் பார்வையிடப்பட்டு தஞ்சை சங்கரவிலாஸ சாரதா பிரஸில் அச்சிடப்பட்டது 1933." என்னும் புத்தகத்தில் பதிபடலம், ஸ்வாத்மஸாக்ஷாத்காரோபதேச படலம், ஷடாத்மபடலம், பூதாத்மாதிபடலம், மந்த்ரபுருஷபடலம் ஆகியன அடங்கிய ஞானபாதத்துடன் அச்சிடப்பட்டது.

ஆகியவற்றுடன் கூடிய இந்தப் பதிப்பானது சைவயோகத்தைப் பற்றிய ஞானத்தையும் அதில் சைவ அபிமானிகளுக்கு ஊக்கத்தையும் மீண்டும் ஏற்படுத்தி, சிவபெருமானருளால் மேன்மேலும் இப்படிப்பட்ட நூல்களைச் சுவடிகளிலிருந்து சீர்திருத்தி அச்சிடுவதற்கான முயற்சிகளைத் தூண்டும் என்று உறுதியாக நம்புகிறேன்.

சிவஞானத்தொண்டன்,

T. கணேசன்,
சைவசித்தாந்த ஆய்வாளர்,
French Institute,
புதுச்சேரி

பதிப்புக்கு உதவிய சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள்

- **T** : இது சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் (Government Oriental Manuscripts Library) உள்ள D. 5550 என்னும் ஓலைச்சுவடியின் தேவநாகரிக் கையெழுத்துப் பிரதி; T. 334 என்னும் எண் கொண்டது; Pondicherry யிலுள்ள French Institute நிறுவனத்திலுள்ளது. நான்கு பாதங்களும் உடையது.

- **T_1**: இது தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்திலுள்ள சுவடியின் தேவநாகரிக் கையெழுத்துப் பிரதி; T. 985 என்னும் எண் கொண்டது; Pondicherry யிலுள்ள French Institute நிறுவனத்திலுள்ளது. யோகபாதமும், அகோரசிவாசாரியாரின் விருத்தியுரையும் கொண்டது.

- **T_2** : இது திருவண்ணாமலை இராமலிங்ககுருக்கள் அவர்களுடைய சுவடியின் தேவநாகரிக் கையெழுத்துப் பிரதி; T. 496 என்னும் எண் கொண்டது; Pondicherry யிலுள்ள French Institute நிறுவனத்திலுள்ளது. யோகபாதம் மூலம் மட்டும் உடையது.

- **T_3**: திருவாடானை அய்யாமணி சிவாசாரியாருடைய சுவடியின் தேவநாகரிக் கையெழுத்துப் பிரதி; T. 349 என்னும் எண் கொண்டது; Pondicherry யிலுள்ள French Institute நிறுவனத்திலுள்ளது. யோகபாதம் மூலம் மட்டும் உடையது; மேலும், இச்சுவடியில் வாதுலசுத்தம், சிவயோகரத்னம், தேவீகாலோத்தரம், சிவஞானபோதம், வாதுலாகமம் (பிராஸாதவிதி படலம்), ஆகமவசனம், விநாயகபட்டர் இயற்றிய சிவமண்டப பூஜாவிதி, தேவீமண்டபபூஜாவிதி, ஸுப்ரஹ்மண்ய மண்டப பூஜாவிதி, அக்னிகாரிய விதி, சிவமண்டபபூஜா (பிரயோகம்),

பிராணபிரதிஷ்டா, காரணாகமம் (சாந்திஹோம விதிபடலம்), திசாஹோமவிதி, ஸம்ஹிதாஹோம விதி, ஸ்வாயம்புவாகமம் (பிரவேசபலிவிதி), ரக்ஷோக்னஹோமவிதி, அகோரசிவாசாரியார் பத்ததி (ரக்ஷோக்னஹோமவிதி), சாஸ்தா ஸ்தாபனம், பிராஸாதஷட்சுலோகீ வியாக்யானம் ஆகிய நூல்களும் அடங்கியுள்ளன.

- T_4: இது சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் (Government Oriental Manuscripts Library) உள்ள D. 15595 என்னும் ஓலைச்சுவடியின் தேவநாகரிக் கையெழுத்துப் பிரதி; T. 760 என்னும் எண் கொண்டது; Pondicherry யிலுள்ள French Institute நிறுவனத்திலுள்ளது. ஸர்வஜ்ஞானோத்தராகமம் நாற்பாதங்களுமுடையது.

- M: Pondicherry யிலுள்ள French Institute நிறுவனத்திலுள்ள ஓலைச் சுவடி. RE. 47653 என்னும் எண் கொண்டது; 37 cm x 3.5 செ.மீ அளவுடையது; யோகபாதம், ஞானபாதம் ஆகிய இரு பாதங்களுக்கும் அகோரசிவாசாரியாருடைய வியாக்யானம் கொண்டது. மேலும் இச்சுவடியில் தேவீகாலோத்தராகமமும், அதற்கு ஸித்தநஞ்ஜர் எனப் பெயர்கொண்ட நிரஞ்ஜனஸித்தர் கன்னட மொழியில் இயற்றிய வியாக்கியானத்தின் ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்பும் உள்ளது.

ஸர்வஜ்ஞானோத்தராகமம்

யோகபாதம்

அகோரசிவாசாரியாரின் உரையுடன் கூடியது

யோகபாதப் பொருள்களை விளக்குவதாகக் கூறுகிறார்-

இதற்குப் பின்னர் யோகத்தைப் [பற்றி] விளக்குவேன்.

குறிப்புரை: உரையின் தொடக்கத்தில் ஆசிரியர் இந்தப் படலத்தில் கூறப்படும் பொருளுக்கும் முந்தையவற்றிற்குமுள்ள ஐவகைத் தொடர்புகளைக் (சம்பந்தம்) கூறுகிறார்: பதி, பசு, பாசமெனும் முப்பதார்த்தங்களுள் யோகமானது மலபரிபாகத்திற்கு உதவுவதால் பதார்த்த சம்பந்தமும், சரியாகாண்டத்தின் கடைசிப் படலத்தின் இறுதி வாக்கியமான आत्मनः शुचिरेतानि परेषामशुचिर्भवेत्। என்பதால் இதற்கு முந்தையதும் யோகிகளுக்குரிய கமண்டலுவைப் பற்றிக் கூறுவதுமான சரியாகாண்டப் படலமான கமண்டலு படலத்துடன் அமைந்த படலசம்பந்தமும், யோககாண்ட மென்பதால் பிரகரணசம்பந்தமும், ஸமுச்சயமென்னும் பதத்தால்[1] மற்றச் சுலோகங்களுடன் உள்ள ஸூத்ர[2] சம்பந்தமும், சரியாகாண்டத்தின் பஸ்மஸ்நானவிதி படலத்தின்

---

[1] இந்தச் சுலோகத்தின் மற்றவரிகள் எந்தச் சுவடியிலும் காணப்படவில்லை. ஆகவே ஸமுச்சயம் என்னும் சொல் சிதைந்து போன அந்த வரிகளில் காணப்படலாம்.

[2] ஆகமச்சுலோகங்களைச் சூத்திரங்கள் என்றும் உரையாசிரியர்கள் வழங்குவர். ரௌரவாகமத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் சிவஞானபோத சுலோகங்களைச் சூத்திரங்கள் என வழங்குவது இங்கு நினைவு கூரத்தக்கது.

योगी योगात्मकान् गुणान् என்னும் வாக்கியத்துடன் வாக்கிய சம்பந்தமும் கொண்டது இந்த முதற் சுலோகம்.

இந்த யோகமானது யாருக்கு எனில், அதைக் கூறுகிறார்-

ஓ ஷண்முகனே! தனித்திருப்போனுக்கும், மனதில் அமைதி யுடையவனுக்கும், மனதை அடக்கி வைராக்கியத்தைக் கடைப்பிடிப்போனுக்கும், சாத்திரங்களில் கூறப்பட்டவாறு மிதமான உணவை உட்கொள்பவனுக்கும், மிதமாகச் செயலாற்றுபவனுக்கும், வாழ்க்கைக்கேற்றவாறு காரியங்களில் ஈடுபடுபவனுக்கும், தேவைக்கேற்ப அளவாக உறங்கி விழித்தெழுபவனுக்கும்[3] தேவையான [யோகத்தை] உள்ளபடி [நான்] கூற கேட்பாயாக.

குறிப்புரை:- சைவயோகத்தில் புருஷதத்துவமான ஆன்மாவிற்குத்தான் இந்த யோகப்பயிற்சியும், அதனால் ஏற்படும் ஸம்ஸ்காரங்களும் உரித்தாகும்; அவை பதஞ்ஜலிமுனிவர் யோகசூத்திரத்தில் கூறியவாறு மனதிற்கு உரித்தனவல்ல. ஏனெனில், சிவயோகப் பயிற்சியின் மூலம் ஆன்மாவிற்கே உரியதும், பரமேசுவரனுக்கொப்பானதுமான பேரறிவு ஆகியன விளக்கமுறுகின்றன. தனித்திருப்பவன் என்ற சொல் எந்தப் பற்றுமின்றி உறுதியான வைராக்கியத்துடன் கூடிய துறவறநெறியைக் கடைப்பிடிப்பவனைக் குறிக்கும். மனதில் அமைதியுடையவன்

---

[3] சிவதருமோத்தரத்திலும் இக்கருத்துக்களே வலியுறுத்தப்படுவதைக் காணலாம்:

युक्ताहारविहारात्मा युक्तचेष्टः स्वकर्मसु ।

युक्तनिद्राप्रबोधश्च सर्वायुक्तविवर्जितः ॥ (பாண்டிச்சேரி, French Institute ல் உள்ள கையெழுத்துப் பிரதி, T. 510 p.402)

என்பதன் மூலம் எந்த உயிர்க்கும் தீங்கிழைக்காமல் மனதையும் இந்திரியங்களையும் அடக்கி ஆள்பவன் குறிக்கப்படுகிறான். இயமம் மன அடக்கத்தையும், நியமம் புலனடக்கத்தையும் குறிக்கும். வைராக்கியத்துடன் கூடியவன் எனில், ஐம்புலன்களையும் மனதையும் அடக்கி சிவபெருமானின் அருட்சக்திவீழ்ச்சியினால் உலகவாழ்க்கை யினின்றும் பற்று நீங்கியவன் எனக் கொள்ளவேண்டும். இங்கு யோகம் என்பது தியானிக்கப்படும் பொருளுக்கும் தியானம் செய்பவனுக்குமுள்ள தொடர்பையே குறிக்கும்; பதஞ்ஜலி முனிவரியற்றிய யோகசூத்திரத்தில் கூறியவாறு சமாதியைக் குறிப்பதன்று. ஏனெனில், சைவயோகத்தில் சமாதி யோகத்திற்கு அங்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுவாகச் சைவ யோகமானது பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தியானம், தாரணா, தர்க்கம், சமாதி என்னும் ஆறு அங்கங்களைக் கொண்டது.

இக்கருத்தை வலியுறுத்தி ஞானிகளுக்கே யோகத்தில் அதிகாரம் எனக் கூறுகிறார்-

தியானம் செய்பவனையும், தியானத்தையும் தியானத்தின் பயனையும் நன்கு அறிந்தவன் எவனோ அவனே [இந்த] யோகத்தைக் கடைப்பிடிக்கத் தகுந்தவன்.

கு-ரை: இங்கு தியானிக்கப்படும் பொருளும் குறிக்கப்பட்டது. இதே பொருளுடையதும் பெரும்பாலும் இதே சொற்களைக் கொண்டதுமான சுலோகம் சிவதருமோத்தரமென்னும் நூலில் காணப்படுகிறது[4].

---

[4] ध्याता ध्यानं तथा ध्येयं यच्च ध्यानप्रयोजनम् ।

एतच्चतुष्टयं ज्ञात्वा योगं युञ्जीत योगवित् ॥ (மேற்படி கையெழுத்துப் பிரதி T. 510, p.401)

எவ்வாறெனில்-

ஆன்மாவே தியானம் செய்பவன்; மனமே தியானம்; சூக்குமமாக இருக்கும் மஹேசுவரனே தியானிக்கப்பட வேண்டிய பொருள்; எல்லாவற்றையும் விட மிக உயர்ந்ததான ஐசுவரியமே தியானத்தின் பயன்.[5]

கு-ரை: மீண்டும் மீண்டும் ஒரே கருத்தையே நினைத்தல் (மனனம்) மனம் எனப்படும். அதுவே தியானமெனப்படுகிறது. இக்கருத்தே மேற்செய்யுளில் குறிக்கப்படுகிறது. மாறாக மனம் என்னும் சொல்லிற்குச் சிந்தனை எனப் பொருள்கொள்ளக் கூடாது. அது யோகத்திற்கங்கமாகக் கொள்ளப்படவில்லை. இவ்வாறே யோகத்திற்கங்கமான மற்றவைகளையும் நன்கு அறிந்து யோகப்பயிற்சியைத் தொடங்கவேண்டும். யோகத்தைப் பற்றிய இவ்வாறான அறிவு இல்லாவிட்டாலும் சிவபெருமான் மீது பக்திகொண்டு தனக்குத் தெரிந்தவரையில் யோகப் பயிற்சியை மேற்கொண்டாலும் முடிவில் அதன் பயனை அடைவான் என்று சிவதருமோத்தரத்தில் கூறக் காண்கிறோம்[6].

---

[5] இக்கருத்தையே சிவதருமோத்தரம் சற்று விரிவாகக் கூறுகிறது:

ज्ञानवैराग्यसम्पन्नः श्रद्धानः क्षमान्वितः ।

शिवभक्तः सदोत्साही ध्यातेत्थं पुरुषः स्मृतः ।

ध्यै चिन्तायां स्मृतो धातुः शिवचिन्ता मुहुर्मुहुः ।

ज्ञानेन परिशुद्धेन ज्ञानध्यानं तदुच्यते ।

सकलः सतनुः शान्तः सर्वज्ञः सर्वगः प्रभुः ।

इत्येतद्विविधं ज्ञेयं शिवज्ञानप्रयोजनम् ।

[6] अथामार्गेणापि योगं श्रद्धानः समभ्यसेत् ।

सोऽपि कालेन बहुना ध्रुवं योगमवाप्नुयात् ।(மேற்படி கையெழுத்துப் பிரதி p.403)

மேலும்,

மானம், அவமானம், சுகம், துக்கம் ஆகியவற்றைச் சமமாகக் கொண்டும், அதிகமான மகிழ்ச்சி, பயம், மனச்சோர்வு ஆகியவற்றை அறவே நீக்கியும் யோகப்பயிற்சியை மேற்கொள்ளவேண்டும்.

கு-ரை: மற்றவர் தனக்குச் செய்யும் நன்மைகளால் மகிழாமலும் தீமைகளால் மனம் நோகாமலும் எல்லாவற்றிலும் சமநோக்குடையவனே ஜீவன்முக்தன் எனப்படுகிறான்; அவனே இந்த யோகப்பயிற்சியை மேற்கொள்ளத் தகுந்தவன்.

யோகப்பயிற்சியை மேற்கொள்ளத் தகுந்த இடங்கள்:

யாருமில்லாத வீடு, மடம், மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும் கோயில், நதிக்கரை, தனிமையான வீடு, அடர்ந்த காடு, எவரும் எளிதில் அண்டமுடியாததும் எந்தவிதமான ஓசையற்றதும் மனிதர்களின் நடமாட்டம் இல்லாததும், யோகப்பயிற்சிக்கு இடையூறு விளைவிக்கும் குற்றங்களற்றதும் சூரியவெப்பம் அதிகமில்லாததுமான இடங்களே [யோகப்பயிற்சி மேற்கொள்ள ஏற்றவை].

கு-ரை: எறும்பு முதலியன யோகப்பயிற்சிச்சிக்கு ஊறு விளைவிப்பன; மேலே கூறப்பட்ட இடங்கள் பயிற்சி மேற்கொள்ளுபவனுக்கு மட்டுமே உரியனவாக இருத்தல் [ஏற்றது]; அவை மற்றவர்களுக்குரியனவாயிருத்தல் ஏற்றதல்ல. சிவதருமோத்தரத்திலும் இக்கருத்தையே காணலாம்[7].

---

[7] स्थितः शिवाश्रमे गुह्ये निःशब्दे जनवर्जिते ।

पुष्पारामफलोपेते पूर्वोक्तावसथान्विते । (சிவதருமோத்தரம், பக்கம் 402)

ஸ்நானம் [முதலியன] செய்து முடித்துத் தூய்மையாகச் சிவபெருமானைத் தலையால் வணங்கி. யோகாசாரியரை வணங்கிப் [பின்பு] யோகப்பயிற்சியை மேற்கொள்ளவேண்டும்.[8]

யோகாஸனங்களைக் கூறுகிறார்-

ஓ குஹனே! பத்மகம், ஸ்வஸ்திகம், பீடார்த்தம், அர்த்தசந்திரம் அல்லது ஸர்வதோபத்திரம் ஆகிய ஏதேனும் ஒரு எளிமையான ஆஸனத்தில் அமர்ந்து, கைகளை கூப்பிக் கொண்டு, உடலை நேராக நிமிர்த்து வைத்துக்கொண்டு, மனதிலிருந்து எல்லாவிதமான பற்றுகளையும், எண்ணங்களையும் நீக்கி மனதை ஆன்மாவிலேயே நிலைத்து நிற்கும்படி [செய்ய வேண்டும்].[9]

கு-ரை: இந்திரியங்களுக்கு விஷயமானவற்றிலிருந்து மனதை நீக்குதல் பிரத்தியாஹாரம் என்னும் யோக அங்கமாகும்; ஆகவே, இச்சுலோகத்தில் பிரத்தியாஹாரமும் சுருக்கமாகக் கூறப்பட்டது.

மேலும் அச்சமயத்தில்-

பற்களால் பற்களைத் தொடாமலும்,[10] நாவினால் கடைவாயைத் தொடாமலும், கண்களைச் சற்று குறுக்கியும் [அமர்ந்துகொண்டு] சிவமந்திரத்தை நன்கு உச்சரிக்க வேண்டும்.

கு-ரை: பிரத்தியாஹாரம் முதலியன செய்யும்போதும் பீஜமந்திரத்தை மனதிற்குள் நன்கு உச்சரிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

---

[8] तदभ्यस्य नमस्कृत्वा शिवं देवीं गणाधिपम् । (மேற்படி நூல், பக்கம், 403)

[9] पद्मकस्वस्तिकादीनामभ्यस्तेनासनेन तु । (மேற்படி நூல், பக்கம், 403)

[10] किञ्चिदुन्नामितशिरा दन्तैर्दन्तानसंस्पृशन् ।(மேற்படி நூல், பக்கம், 403)
दन्ताग्रसन्निधौ जिह्वामचलाख्यं निवेश्य च ।

அம்மந்திரத்தை உச்சரிப்பதால் விளையும் பயன்கள்:

அம்மந்திரம் தன்மாத்திரைகளையும், அதனின்றும் தோன்றியவற்றையும் ஆன்மாவிற்கு நன்கு விளங்கச் செய்யும்.

கு-ரை: இங்குச் சிவமந்திரம் ஸகர்ப்ப பிராணாயாமத்துடனும் சிவத்தியானத்துடனும் கூடியதாய் ஸமாதி என்னும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்று எல்லாத் தத்துவங்களையும் ஆன்மாவிற்குப் பிரகாசிக்கச் செய்யும். பிராணாயாமம் முதலியன இயற்றும் போதும் சிவபெருமானிடத்தில் மனதை நிலைநிறுத்தித் தியானம் செய்யவேண்டும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

இவ்வாறு இடைவிடாது நன்கு அந்த அஸ்திரத்தைப் பயில்வதால் அத்தத்துவங்கள் சாதகனைக் கட்டுப்படுத்தாமல் அமைகின்றன என்னும் கருத்தும் வலியுறுத்தப்படுகிறது:-

ஓ ஷண்முகனே ! [இவ்வாறு மேலே கூறப்பட்ட] அஸ்திரத்துடன் (மூலமந்திரத்துடன்) கூடிய [பிரத்தியாஹாரம், பிராணாயாமம் ஆகிய பயிற்சியானது] அத்தத்துவங்களை அழிக்கவும் வல்லது.

அங்கமந்திரங்களாகிய ஹிருதயம், சிரஸ், ஆகியனவும் அம்மூலமந்திரத்திலிருந்தே தோன்றியனவாதலால் அதைத் தவிர்த்துத் தனியாக அவ்வங்கமந்திரங்களை உச்சரிக்கத் தேவையில்லை என்பது கூறப்படுகிறது:-

ஓ குஹனே ! அச்சாதகன் தனியாக ஹிருதயம், சிரஸ், சிகா, கவசம், அஸ்திரம் மற்றும் நேத்திரம் [ஆகிய ஆறு அங்கமந்திரங்களை] மீண்டும் [உச்சரிக்கத்] தேவையில்லை.

பின்னர் பிராணாயாமத்தில் ஸகர்ப்பமென்னும் வகையை முதலில் கூறுமுகத்தான் கும்பகப் பிராணாயாமம் செய்து பின்னர் தியானம் செய்யவேண்டுமெனக் கூறுகிறார்:-

யோகத்தை நன்கறிந்தவன் பிராணன், அபானன் என்னுமிரண்டு வாயுக்களின் செயல்களைக் கட்டுப்படுத்தி ஸுஷும்நா நாடியினுள்ளேயே சஞ்சரிக்கும்படிச் செய்து சிவபெருமானைத் தியானிக்க வேண்டும்.

கு-ரை:- ஸகர்ப்பவகைப் பிராணாயாமம் மிருகேந்திராகமத்திலும் கூறப்படுகிறது: தியானம், ஜபம் ஆகியவற்றுடன் கூடிய [பிராணாயாமமானது] ஸகர்ப்பமெனப்படும்; அவ்விரண்டு மில்லாதது மற்றது [அகர்ப்பமெனப்படும்].

அடுத்து, தியானத்தின் ஆழ்ந்த நிலையே ஸமாதியென்று விளக்குகிறார்:-

[யோகத்தை] நன்கறிந்தவன் மிகச் சூக்குமமானதும், எங்கும் நீக்கமற வியாபித்திருப்பதும், மாசற்றதும், அழிவற்று என்றுமிருப்பதும், மாற்றமில்லாததுமான பரஞ்சோதியுடன் எப்போதும் பிரிவற்ற நிலையை நன்கு உணர்கிறான்.

கு-ரை:- இச்சுலோகத்தில் அழிவற்று என்றுமிருப்பது (நிர்விகல்பம்) என்னும் சொல்லானது தியானிக்கப்படும் பொருளின் உருவம் நன்கு விளங்கி அதில் தன்னின் வேறற்ற நிலையை உணர்வதால் தியானம் செய்பவன், தியானம் ஆகிய வேறுபாடுகளற்ற நிலையைக் குறிப்பது.

அவ்வாறே பதஞ்ஜலியும் கூறுகிறார்:

மனதில் ஒரே எண்ணத்துடன் இருக்கும் நிலையே தியானம்; அதுவே உண்மைச் சொரூபமற்றதுபோல் இருப்பது ஸமாதி.

இவ்வாறாக ஸகர்ப்பம், நிர்கர்ப்பம் என்னுமிரண்டு வகைப் பிராணாயாமம் இருக்க, வேறொரு முறையில் பிராணாயாமம் மூவகைப்படும் என்கிறார்:-

உத்தமம், மத்தியமம், மந்தம் என ஸகர்ப்பம் மூவகைப்பட்டது. இங்கு ஸகர்ப்பம் எனக் குறிப்பாகச் சொல்லப்பட்டது; அகர்ப்பப் பிராணாயாமமும் மூவகைப்படுமென மேலே கூறப்போகிறார்.

மற்றுமொரு முறையாகப் பிராணாயாமம் மூன்று வகைப்படுமெனக் கூறுகிறார்:-

பூரகம், கும்பகம், ரேசகம் எனப்பட்ட அந்த மூன்றுவிதமான பிராணாயாமத்தையும் [சாதகன்] செய்யவேண்டும்.

ஸமாதியை அடைந்து அதன்மூலம் தத்துவங்களையெல்லாம் ஜயிப்பது ஸகர்ப்பப் பிராணாயாமத்தின் பலனாக முன்னர்க் கூறப்பட்டது; [அவ்வாறே,] அகர்ப்பப் பிராணாயாமத்தின் பலன்களையும் கூறுகிறார்:-

பிராணாயாமம் செய்வதன் மூலமாகப் [பலவித] குற்றங்களை அழித்து நீக்குகிறான்; தாரணை செய்வதன் மூலம் பாவங்களை நீக்குகிறான். பிரத்தியாஹாரம் செய்வதன் வாயிலாகக் [கெட்ட] சேர்க்கைகளையும் தியானத்தின் மூலம் அழியாத குணங்களையும் அழித்து நீக்குகிறான்.

கு-ரை: உடல் உள்ளவரை இருக்கும் அணிமா, மஹிமா முதலிய எண்குணங்கள் இங்குக் குறிக்கப்படுகின்றன. அழியாத குணங்கள் என்பதன் மூலம் சூன்னியமற்றவை என்பது பொருள். இச்சுலோகத்தில் கூறப்படுவதாவது மேற்சொன்ன பயிற்சிகளினால் உடல் வலிமையும் பெறப்படும் என்பது.

மேல் பூரகம் முதலிய [பிராணாயாம வகைகளைக்] கூறுகிறார்:-

உடல் முழுவதையும் நிரப்பும் பூரகம் என்னும் இந்தப் பிராணாயாமம் என்பது முடிந்த வரையில் காற்றினால் வயிற்றை நிரப்புவதாகும்.

[மூச்சுக் காற்று வெளியேறும்] எல்லா துவாரங்களையும் அடைத்துவிட்டு மூச்சை உள்ளிழுப்பதும் வெளியேற்றுவதும் இன்றி நன்கு நிரப்பப்பட்ட குடத்தைப் போல் இருப்பதே கும்பகமெனப்படும்.

அதன்பிறகு [நிரப்பிய] காற்றை மூச்சை மிகமிக மெதுவாக விடுவதன் மூலம் வெளியேற்றுவதே ரேசகமெனப்படும்; ரேசகம் பிராணனை வெளியேற்றுவதற்கு ஏதுவாயிருப்பதாகும்.

கு-ரை: பூரகம், ரேசகம் ஆகிய இரண்டும் முறையே இடப்புற வலப்புற நாடிகள் மூலம் செய்யப்படவேண்டும். இங்கு ரேசகமானது யோகாப்பியாசம் செய்பவனுடைய வாழ்வின் முடிவில் அவனுடைய உடலிலமைந்துள்ள பல கிரந்திகளைப் பிளந்து கொண்டுப் பிராணன் வெளியேறுவதற்குத் துணையாயிருப்பது.

பூரகம் முதலியவற்றின் கால அளவைகளைக் கொண்டு அவற்றின் உத்தமம், மத்தியமம் ஆகிய தரங்களைக் கூறுகிறார்:

முன்கையை நீட்டி விரல்களால் சொடுக்கிக்கொண்டே முழங்காலை ஒரு சுற்று சுற்றும் நேரம் மாத்திரை எனப்படும். பன்னிரண்டு மாத்திரைகளைக் கொண்டது ஒரு தாலம் என வழங்கப்படும்; பன்னிரண்டு தாலம் கொண்ட கால அளவுக்குச் செய்யும் பிராணாயாமம் கடைசி வகையைச்

சேர்ந்தது; அதுவே இருபத்தி நான்கு தாலம் கொண்ட கால அளவுக்குச் செய்யப்படுவது மத்தியம வகை; நாற்பத்தெட்டு தாலம் கொண்ட காள அளவுக்குச் செய்யப்படும் பிராணாயாமம் உயர்ந்த [உத்தம] வகையைச் சேர்ந்தது.

அவற்றைச் செய்யும் முறை:

ஒவ்வொரு நாளும் [பிராணாயாமம் செய்யும் போது] யோகாப்பியாசத்தை அறிந்தவன் மாத்திரை அளவுகளைக் கிரமமாகக் கூட்டவேண்டும்; மிக வேகமாகவோ அல்லது மிக மெதுவாகவோ மாத்திரை அளவுகளை அதிகரிக்காமல் கிரமமாகக் கூட்ட வேண்டும்.

பிராணாயாமம் செய்யும்பொழுது இதயம் முதலிய இடங்களில் தியானிக்கப்படும் பொருளின் சொரூபம் முதலியவற்றில் ஆழ்ந்திருக்கும் மனத்திற்குத் தாரணை செய்யும் கால அளவுகளைக் கூறுகிறார்:

உத்தமவகைப் பிராணாயாமத்தைப் போல் இருமடங்கு கால அளவுக்குச் செய்யப்படுவது தாரணை எனப்படும்; தாரணையைப் போல் இருமடங்கு கால அளவுகளுக்குச் செய்யப்படுவது யோகம் என வழங்கப்படும். யோகத்தைப் போல் இருமடங்கு கால அளவு கொண்டது சிவபெருமானுடன் கொண்ட யோகஸித்தி எனப்படும்.

கு-ரை: மேற்படி சுலோகத்தில் யோகம் என்னும் சொல் தியானிக்கப்படும் பொருளின் சொரூபத்தைப் பற்றிய இடையறாத சிந்தனை என்னும் பொருளுடையது. தியானம் என்னும் சொல் தியானம் செய்பவனுக்கும் தியானிக்கப்படும் பொருளுக்குமுடைய தொடர்பைக் குறிக்கும். யோகஸித்தி

என்னும் சொல்லானது ஸமாதியைக் குறிக்கும். இவ்வாறாக தாரணை, தியானம், ஸமாதி என்னும் மூன்று யோக அங்கங்கள் முறையே இங்குக் கூறப்பட்டன.

இங்கு ஓர் ஐயம் எழுகிறது: [ஸகர்ப்ப கும்பகத்தைப் போல்] பன்னிரு மடங்கு கால அளவுக்குச் செய்யப்படுவது தாரணை; அந்தத் தாரணையைப் போல் பன்னிரு மடங்கு கால அளவு கொண்டது தெய்வீக ஒளியை நல்கும் தியானம்; அந்தத் தியானத்தைப் போல் பன்னிருமடங்கு கால அளவுக்குச் செய்யப்படுவது அணிமா, மஹிமா முதலிய எட்டு ஸித்திகளை நல்கும் ஸமாதி என்று மிருகேந்திராகமத்தில் கூறப்பட்டுள்ளதே; ஸர்வஞானோத்தரத்திலோ வேறுவிதமாகக் கூறப்பட்டுள்ளதே என்றால் அது வேறு தந்திரமானதால் கிரியையில் வேறுபாடு காணப்படுகிறது எனக் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக மேலே கூறிய யோக அங்கங்களைக் கொண்ட அங்கியானயோகம் எனப்படுவது தியானிக்கப்படும் பொருளை அப்படியே முழுவதும் சாக்ஷாத் உணர்ந்தறிதலாகிய சிறப்பானதொரு தொடர்பு என்கிறார்:

அச்சமயம் தன்னுடைய ஆன்மாவில் மிகச் சூக்ஷ்மமான கந்ததன்மாத்திரயை நேராகக் காண்கிறான்; பின்பு சுவை (இரசம்), ஒளி (தேஜஸ்), தொடு உணர்ச்சி (ஸ்பரிசம்), ஒலி (சப்தம்) ஆகிய தன்மாத்திரைகளையும் முறையே அவற்றின் வண்ணம், [அவற்றிற்குரிய] மூலமந்திரங்களுடன் தனித்தனியாகக் காண்கிறன். அஹங்காரம், மனம், புத்தி, குணம், அவ்வியக்தம், புருஷன் ஆகிய தத்துவங்களையும் அவ்வவற்றின் சிறப்புத் தன்மை மற்றும் குணங்களுடன் முழுதும் நன்கு அபிவியக்தியடைந்ததாகக் காண்கிறான்.

வித்தியை, கலை, காலம், மாயை ஆகிய தத்துவங்களையும் ஒவ்வொன்றாக முறையே நன்கு உணர்ந்து அறிந்து அவையெல்லாவற்றையும் அஸ்திரமந்திரத்தால் பிளக்கிறான். பின்னர், வித்தியேசுவரதத்துவத்தையும், அடுத்து ஸதாசிவ தத்துவத்தையும் க்ஷுரிகாஸ்திரத்தினால் பிளந்து [முடிவில்] எல்லாவற்றையும் விடச் சூக்ஷ்மமான சிவதத்துவத்திற்குள் நுழைகிறான்.

கு-ரை: ஐம்பூதங்களின் சூக்ஷ்மமான வடிவத்தை மட்டுமல்லாமல் அவற்றின் ஸ்தூலவடிவத்தையும் மேற்சொன்ன யோகப் பயிற்சியினால் உணர்ந்து அறிய இயலும்; தன்மாத்திரைகள் யோகப்பயிற்சியினால் மட்டுமே அறியத்தக்கன என்பது உண்மையில் இங்குக் கூறப்படும் செய்தி. அவ்வாறே பிருதிவீ முதலியவற்றின் ஸூக்ஷ்ம சொரூபமும் யோகப்பயிற்சியினால் ஸாக்ஷாத் உணர்ந்து அறியப்பட வேண்டும் என்று மதங்கபாரமேசுவரம் முதலான ஆகமங்களில் கூறக்காண்கிறோம். ஆக, பிருதிவீ முதல் சிவம் ஈறாக எல்லாத் தத்துவங்களையும் ஒவ்வொன்றாக ஸாக்ஷாத் உணர்ந்து அறிந்து முன்பு கூறியவாறு மூலமந்திரத்துடன் கூடிய க்ஷுரிகாஸ்திர மந்திரத்தினால் பிளத்தல் அதாவது [அவற்றை] ஜயித்தல், [அவை] ஆன்மாவைக் கட்டுப்படுத்துவதிலிருந்து விலக்குதல் என்பதே இங்கு விளக்கப்படும் செய்தி. இக்கருத்தே முன்னர் 11 ம் சுலோகத்தின் பிற்பகுதியிலும், 12 ம் சுலோகத்தின் முற்பகுதியிலும் எடுத்துச் சொல்லப்பட்டது. மேலும், ஸாலம்பந யோகப்பயிற்சியினால் தத்துவங்கள் யாவற்றையும் ஜயித்து நிராலம்பந யோகத்தினால் தன்னுடைய ஆன்மாவை நிஷ்கல சிவத்துடன் சேர்க்கவேண்டும். இங்கு தத்துவங்களை வெல்வதற்குத் துணைபுரிவதும் பிற சாத்திரங்களில்

கூறப்படுவதுமான தர்க்கம் என்னும் யோகாங்கம் உள்ளீடாகக் கூறப்படுகிறது.

"ஊஹம் (தருக்கம்) யோகப் பயிற்சிக்கு மிக நெருங்கிய அங்கம்" என்னும் ஆகம வசனம் பிரமாணம்.

அடுத்து யோகப் பயிற்சியின் பலன்களைக் கூறுகிறார்: யோகத்தை நன்கறிந்து பயிற்சி செய்பவன் அழிவற்ற நிலையையும், சிவபெருமானுடைய சொரூபத்தையும், எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் ஆற்றலயும், எங்கும் வியாபித்திருக்கும் தன்மையையும், மிகச் சூக்ஷ்மமானவனாகவும், எல்லாவற்றையும் தன்வசத்தில் அடக்கி ஆளும் ஆற்றலையும், எல்லாச் செயல்களையும் தடையின்றிச் செய்யும் பேராற்றலையும் அடைகிறான்.

கு-ரை: இங்கு ஓர் ஐயம் எழுகிறது: மேற்கூறப்பட்ட பலன்களையெல்லாம் யோகப்பயிற்சியின் மூலமே அடைவதால் முக்திக்கு உபாயமாகக் கூறப்பட்ட தீக்ஷை முதலியன பயனற்றவையாகிவிடுமே என்பது.

அவ்வாறு ஐயம் கொள்ளத் தேவையில்லை; ஏனெனில், தீக்ஷை பெற்றுக்கொள்ளாமல் யோகபாதத்தில் கூறப்படும் யோகப்பயிற்சிகளை எவரும் மேற்கொள்ள இயலாது; ஆகமத்தில் விதிக்கப்படும் எல்லாக் கிரியைகளுக்கும், யோகப்பயிற்சிகளுக்கும், ஆகமங்களை முறைப்படி ஓதுவதற்கும் அடிப்படைத் தகுதி தீக்ஷை. மேலும், யோகப் பயிற்சிகள் தீக்ஷை மேற்கொண்டவனின் கருமமலமறைப்பை மட்டுமே நீக்குகின்றன; ஆணவமலமறைப்பையல்ல. ஆகமங்களை ஓதுபவன் தான் யோகப்பயிற்சிகளை மேற்கொள்ளத் தேவையான ஞானமும், தகுதியும் உடையவன்.

எனவே [ஆகமங்களினின்றும்] அறிந்து கொள்ளவேண்டிய அடிப்படைக் கருத்துக்களை கூறுகிறார்:

எல்லா ஆகமசாத்திரங்களினின்றும் அறிந்துகொள்ளப்பட வேண்டியவை நால்வகைப் [அடிப்படைப்] பொருள்கள்: அவை முறையே பசு, பாசம், பதி, சிவபெருமான் என்பன. கு-ரை: இங்குப் பதி என்று கூறப்படுவது அதிகார அவத்தையிலிருக்கும் சிவபெருமானே; வேறு தனியான பொருளன்று. பதிப்பொருளே உபாதியுடன் கூடியிருக்கையில் சிவபெருமானென்றும் உபாதியில்லாதிருக்கும் அவத்தையில் பதியென்றும் வழங்கப்படுகிறது.

இவ்வாறாக, [பதார்த்த] ஞானமும் தீக்ஷை முதலியவற்றிற்கு அங்கமானதால் [ஞானமானது] நேரிடையாக மோக்ஷத்திற்கு உபாயமாக அமையாமல், தீக்ஷை வாயிலாக மோக்ஷத்திற்கு உபாயமாகிறது என்னும் கருத்தை வலியுறுத்துகிறார்:

தந்திரங்களின் சாரமானதும், மிக அரியதுமான தத்துவஞானத்தை அடைந்து அதன்படி ஒழுகுபவன் மீண்டும் [மாயையினால்] உண்டாகும் இந்த உடலை அடைவதில்லை. [பிறப்பற்ற நிலையான மோக்ஷத்தை அடைகிறான்].

मूलागमश्लोकपादसूची

पू॰१ - சுலோகத்தின்முதற்பகுதி ; उ॰१ - மூன்றாம் பகுதி;

पू॰२ - இரண்டாம் பகுதி; उ॰२ - நான்காம் பகுதி

अभिव्यक्तानि जानीयात् २७ उ॰१

अमृतात्मा शिवः साक्षात् ३० पू॰१

अविनाभावसम्युक्तो १४ पू॰१

अस्त्रयुक्तः षडानन १२ पू॰२

अहंकारं मनो बुद्धिं २७ पू॰१

आत्मसंस्थं मनो गुह १० पू॰२

आत्मा ध्याता मनो ध्यानं ३ उ॰१

आसनं रुचिरं बद्ध्वा ९ उ॰१

उक्ताहारविहारस्य १ उ॰१

उत्तमा मध्यमा मन्दाः १५ उ॰१

उदरं पूरयित्वा तु १७ उ॰१

उपस्थाप्याञ्जलिं तथा ८ उ॰२

ऊर्ध्वकायः समं शिरः ९ उ॰२

एकाकिनस्तु शान्तस्य १ पू॰१

एकैकां वर्धयेन्मात्रां २३ पू॰१

किञ्चित् कुञ्चितनेत्रस्तु ११ पू॰१

क्रमेणैव विवर्धयेत् २३ उ॰२

गन्धतन्मात्रमात्मनि २५ उ॰२

गुणमव्यक्तपूरुषम् २७ पू॰२

गृहे घोरवनेऽपि वा ६ पू॰२

गृह्णाति न पुनस्तनुम् ३२ उ॰२

छोटिकां तु ततो दद्यात् २१ पू॰१

जानुं कृत्वा प्रदक्षिणम् २० उ॰२

ज्येष्ठस्तद्द्विगुणो भवेत् २२ उ॰२

ज्योतीरूपं सुनिर्मलम् १४ उ॰२

ततः सादाशिवं परम् २९ पू॰२

ततः सूक्ष्मं शिवं विशेत् २९ उ॰२

ततोर्ध्वं रेचयेद्वायुं १९ उ॰१

तदानुपश्यते सूक्ष्मं २५ उ॰१
तद्धि ध्यानप्रयोजनम् २ उ॰२
तन्त्रसारं तु दुर्लभम् ३२ पू॰२
तन्मात्राद्यानि देहिनाम् ११ उ॰२
तयोर्वृत्तिं निरुद्ध्यात्मा १४ पू॰१
तस्मादेव प्रवर्तते १३ पू॰२
तस्मिन् विष्टस्तु योगवित् ३० पू॰२
तालद्वादशकं ज्ञेयम् २२ पू॰१
देवतायतने शुभे ५ उ॰२
दृष्ट्वानुक्रमशः सर्वान् २८ उ॰१
द्विगुणा धारणा मता २४ पू॰२
धारणाद्विगुणो योगो २४ उ॰१
धारणाभिस्तु किल्बिषम् १६ उ॰१
ध्यानेनानश्वरान् गुणान् १७ पू॰२
ध्येयः सूक्ष्मो महेश्वरः ३ उ॰२
न दन्तैः संस्पृशेद्दन्तान् १० पू॰१
न त्वरेण विलम्बेन २३ उ॰१
नदीतीरे विविक्ते वा ६ पू॰१
न पृथक् हृदयं तस्य १२ उ॰१
न शिरो न शिखा गुह १२ उ॰२
निर्विकल्पं सदा बुधः १५ पू॰२
निर्विकल्पे निरातपे ७ पू॰२
निःशब्दे जनवर्जिते ६ उ॰२
निश्वासोच्छ्वासवर्जितः १८ उ॰२
पद्मकं स्वस्तिकं वापि ८ उ॰१
पशुः पाशः पतिश्चैव ३१ उ॰१
पश्यते क्रमयोगेन २६ उ॰१
पिधाय सर्वद्वाराणि १८ उ॰१
पीठार्धमर्धचन्द्रं वा ९ पू॰१
पुनर्विनाशकश्चैव १२ पू॰१
पूरकुम्भकरेचकान् १६ पू॰२
पूरको देहपूरकः १८ पू॰२
प्रच्छन्ने च विविक्ते च ६ उ॰१
प्रणम्य शिरसा शिवम् ७ उ॰२

प्रत्यहं योगवित्तमः २३ पूं२
प्रत्याहारेण संसर्गान् १७ पूं१
प्रमाणं तालसंज्ञकम् २१ उं २
प्रसार्य चाग्रहस्तं तु २० उं१
प्राणसंशयकारकः २० पूं२
प्राणापानौ समौ कृत्वा १३ उं१
प्राणायामः स कुम्भकः १९ पूं२
प्राणायामस्तु कन्यसः २२ पूं२
प्राणायामांश्च तान् कुर्यात् १६ पूं१
प्राणायामैर्दहेद्दोषान् १६ उं१
प्राणायामोत्तमो यत्तत् २४ पूं१
प्राणायामो भवेदेवं १८ पूं१
भित्वा तु क्षुरिकास्त्रेण २९ उं१
मध्यमश्च चतुर्विंशत् २२ उं१
मात्रा द्वादश विज्ञेयाः २१ उं१
मात्रैषा त्वभिधीयते २१ पूं२
मानामानौ समौ कृत्वा ४ उं१
मायां विद्यां ततः परम् २८ पूं२
मृदुनिश्वाससंयुतम् १९ उं २
यत् परापरमैश्वर्यम् ४ पूं १
यतचित्तविरागिणः १ पूं२
युक्तचेष्टस्य कर्मसु १ उं २
योगाद्दोषविनिर्मुक्ते ७ पूं१
योगसिद्धिरिति ज्ञेया २५ पूं१
योगं युञ्जीत मानवः ८ पूं२
योगाचार्यं नमस्कृत्य ८ पूं१
योगोऽपि द्विगुणीकृतः २४ उं२
यो ध्याता यच्च तद्ध्यानं २ उं१
रसं तेजश्च स्पर्शं च २६ पूं१
रेचकस्त्वेष विख्यातः २० पूं१
वर्णभावैः पृथग्विधैः २६ उं२
वर्मास्त्रनेत्रसहितं १३ पूं१
वायुना यावदीप्सितम् १७ उं२
विद्यां कलां ततः कालं २८ पूं१

विद्येश्वरं ततस्तत्त्वं २९ पूँ१

शब्दतन्मात्रमेव च २६ पूँ२

शिवं ध्यायेद्विचक्षणः १४ पूँ२

शिवं संयक् तदोच्चरेत् ११ पूँ२

शिवश्चेति यथाक्रमम् ३१ उँ२

शिवेन परमात्मना २५ पूँ२

शून्यागारे मठे रम्ये ५ उँ१

सगर्भाः त्रिविधाः स्मृताः १५ उँ२

स योगं योक्तुमर्हति ३ पूँ२

संत्यज्य योगमभ्यसेत् ५ पूँ२

सम्पूर्णकुम्भवत् तिष्ठेत् १९ पूँ१

सर्वतोभद्रमेव वा ९ पूँ२

सर्वथा वर्तमानोऽपि ३२ उँ१

सर्वसङ्गान् परित्यज्य १० पूँ१

सर्वज्ञः सर्वगः सूक्ष्मः ३० उँ१

सर्वाण्येतानि यो वेत्ति ३ पूँ१

सर्वेशः सर्वकृद्भवेत् ३० उँ२

सर्वेष्वेव च शास्त्रेषु ३१ पूँ१

सुखदुःखे समे तथा ४ उँ२

सुसूक्ष्मं व्यापकं नित्यं १५ पूँ१

सुषुम्नान्तरचारिणौ १३ उँ२

सृक्विण्यौ च न जिह्वया १० उँ२

सोद्भासयति तत्त्वानि ११ उँ१

स्नात्वा शुचिरुपस्पृश्य ७ उँ१

स्वधर्मगुणलक्षणात् २७ उँ२

हर्षं भयं विषादं च ५ पूँ१

ज्ञात्वा तु तत्त्वसद्भावं ३२ पूँ१

ज्ञेयं वस्तुचतुष्टयम् ३१ पूँ२

प्रत्यहं योगवित्तमः २३ पू॰२
प्रत्याहारेण संसर्गान् १७ पू॰१
प्रमाणं तालसंज्ञकम् २१ उ॰२
प्रसार्य चाग्रहस्तं तु २० उ॰१
प्राणसंशयकारकः २० पू॰२
प्राणापानौ समौ कृत्वा १३ उ॰१
प्राणायामः स कुम्भकः १९ पू॰२
प्राणायामस्तु कन्यसः २२ पू॰२
प्राणायामांश्च तान् कुर्यात् १६ पू॰१
प्राणायामैर्दहेद्दोषान् १६ उ॰१
प्राणायामोत्तमो यत्तत् २४ पू॰१
प्राणायामो भवेदेवं १८ पू॰१
भित्वा तु क्षुरिकास्त्रेण २९ उ॰१
मध्यमश्च चतुर्विंशत् २२ उ॰१
मात्रा द्वादश विज्ञेयाः २१ उ॰१
मात्रैषा त्वभिधीयते २१ पू॰२
मानामानौ समौ कृत्वा ४ उ॰१
मायां विद्यां ततः परम् २८ पू॰२
मृदुनिश्वाससंयुतम् १९ उ॰२
यत् परापरमैश्वर्यम् ४ पू॰१
यतचित्तविरागिणः १ पू॰२
युक्तचेष्टस्य कर्मसु १ उ॰२
योगदोषविनिर्मुक्ते ७ पू॰१
योगसिद्धिरिति ज्ञेया २५ पू॰१
योगं युञ्जीत मानवः ८ पू॰२
योगाचार्यं नमस्कृत्य ८ पू॰१
योगोऽपि द्विगुणीकृतः २४ उ॰२
यो ध्याता यच्च तद्ध्यानं २ उ॰१
रसं तेजश्च स्पर्शं च २६ पू॰१
रेचकस्त्वेष विख्यातः २० पू॰१
वर्णभावैः पृथग्विधैः २६ उ॰२
वर्मास्त्रनेत्रसहितं १३ पू॰१
वायुना यावदीप्सितम् १७ उ॰२
विद्यां कलां ततः कालं २८ पू॰१

विद्येश्वरं ततस्तत्त्वं २९ पू° १
शब्दतन्मात्रमेव च २६ पू° २
शिवं ध्यायेद्विचक्षणः १४ पू° २
शिवं संयक् तदोच्चरेत् ११ पू° २
शिवश्चेति यथाक्रमम् ३१ उ° २
शिवेन परमात्मना २५ पू° २
शून्यागारे मठे रम्ये ५ उ° १
सगर्भाः त्रिविधाः स्मृताः १५ उ° २
स योगं योक्तुमर्हति ३ पू° २
संत्यज्य योगमभ्यसेत् ५ पू° २
सम्पूर्णकुम्भवत् तिष्ठेत् १९ पू° १
सर्वतोभद्रमेव वा ९ पू° २
सर्वथा वर्तमानोऽपि ३२ उ° १
सर्वसङ्गान् परित्यज्य १० पू° १
सर्वज्ञः सर्वगः सूक्ष्मः ३० उ° १
सर्वाण्येतानि यो वेत्ति ३ पू° १
सर्वेशः सर्वकृद्भवेत् ३० उ° २
सर्वेष्वेव च शास्त्रेषु ३१ पू° १
सुखदुःखे समे तथा ४ उ° २
सुसूक्ष्मं व्यापकं नित्यं १५ पू° १
सुषुम्नान्तरचारिणौ १३ उ° २
सृक्विण्यौ च न जिह्वया १० उ° २
सोद्भासयति तत्त्वानि ११ उ° १
स्नात्वा शुचिरुपस्पृश्य ७ उ° १
स्वधर्मगुणलक्षणात् २७ उ° २
हर्षं भयं विषादं च ५ पू° १
ज्ञात्वा तु तत्त्वसद्भावं ३२ पू° १
ज्ञेयं वस्तुचतुष्टयम् ३१ पू° २

அநுபந்தம்

அசிந்தியவிசுவஸாதாக்கியமெனும் ஆகமம் யோக தீக்ஷையைப் பற்றித் தனியே ஒரு படலத்தில் விளக்குகிறது. இச்செய்தி வேறு ஆகமங்களில் விளக்கப்படுவதாகத் தெரியவில்லை. அவ்வாகமம் இதுவரை பதிப்பிக்கப்பட்டு வெளிவராததால் சைவசித்தாந்த அறிஞர்களுக்கு நன்மை பயக்குமென்றெண்ணி யோகதீக்ஷையைப் பற்றிய சிறுகுறிப்பை இங்குக் கூற விழைகிறேன்.

தொடக்கத்தில், இந்த யோகதீக்ஷையானது ஆன்மாவிற்குச் சிவபெருமானுடன் உள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்துவதாகவும், பொய்யானவற்றையும் அல்லவற்றையும் நீக்கி என்றும் உள்ளதைப் பிரகாசிக்கச் செய்கிறதென்றும் ஆகமம் கூறுகிறது. இம்மார்க்கத்தை ஸஹமார்க்கம் என்று இவ்வாகமம் கூறுகிறது.[1]

சிவபெருமானை அடையவேண்டும் என்னும் தீவிர விருப்பத்தை உடையவனும் மனதை ஒருமுகப்படுத்தி அதை அடக்கியவனுமே இந்த தீக்ஷையைப் பெறத் தகுதியுடையோன்.

தீக்ஷாமண்டபம், மண்டலங்களை வரைதல், முதலிய பூர்வாங்கங்களைச் செய்தபின்னர் அக்னிகாரியம் செய்வதற்கு வாகீசுவரர் வாகீசுவரீ ஆகியோரை அக்னியில் ஆவாஹனம் செய்து சீடனுடைய ஆன்மாவிற்குக் கர்ப்பாதானம் முதலிய சடங்குகளையியற்றி வாகீசுவரீ கர்ப்பத்தில் அவ்வான்மாவை

---

[1] சிவஞானசித்தியார் முதலிய மெய்கண்டசாத்திரங்களில் சைவயோக மார்க்கம் சகமார்க்கம் என்று வழங்கப்படுவது சாத்திரம் கற்றோர் அறிந்ததே.

பிறப்பிக்கச் செய்தல் முதலியன இயற்றப்படுகிறன. இடா முதல் தொடங்கி சங்கினீ ஈறாகவுள்ள பத்து நாடிகளையும், பிராணன் முதல் பிரபஞ்சக ஈறான பதினான்கு பிராண வாயுக்களையும் தியானித்து, அவற்றுள் ஸுஷும்நா நாடியையும் அதனுள் மூலாதாரத்தையும் பிரஹ்மரந்திரத்தையும் இணைக்கும் பிரஹ்மநாடியையும் தியானிக்க வேண்டும். இப்பிரஹ்மநாடியிலமைந்துள்ள மூலாதாரம் முதலான பத்து ஆதாரங்களையும் அவ்வவற்றின் உருவ அமைப்பு, நிறம், பிரஹ்மா முதலான காரணேசுவரர்கள், இச்சாசக்தி, ஞானசக்தி முதலியவர்களுடனும், ஸூரியன், ஸோமன், அக்னி ஆகியவற்றுடன் தியானிக்க வேண்டும். இச்சாசக்தியின் நடுவில் ஆனந்த வடிவினனான பரமேசுவரனைப் பாவித்து அதிலிருந்து பொழியும் அமிருத தாரையினால் சீடனுடைய ஆன்மா முழுதும் நனைக்கப்படுவதாக பாவிக்கவேண்டும். பிந்துகாந்தம், ஹிருதாந்தம், நாப்பியந்தம், விஷ்ணுதேஹகம், பிரஹ்மதேசகதம் ஆகிய ஐந்து சூத்திரங்கள் சீடனுடைய சிகையிலிருந்து தொங்கவிடப்பட்டு அவற்றுள் தத்துவங்களை நியாஸம் செய்து புரோக்ஷணம் தாடனம் முதலிய கிரியைகள் செய்யப்படுகின்றன. ஆசாரியன் ரேசகம் மூலமாக சீடனின் ஆன்மாவுக்குள் நுழைந்து தன்னுடைய ஆன்மாவுக்குள் நிறுத்தி கர்ப்பாதானம் முதலிய சடங்குகள் இயற்றப்பட்டு பிரஹ்மாவைப் பூசித்து இருபது தத்துவங்களை நியாஸம் செய்தல் முதலியன செய்யப்படுகின்றன. பின்னர் பிரஹ்மாவுக்கு நிவேதனங்களை அளித்து விஸர்ஜனம் செய்த பின்னர் சிகையிலிருந்து தொங்கும் ஒரு சூத்திரத்தைக் கத்தரித்து அக்னியில் அதை ஹோமம் செய்கிறார் ஆசாரியர்.

அவ்வாறே விஷ்ணுவை ஆவாஹனம் செய்து பிரார்த்தித்துக் கொண்டு முன்போலவே ஹிருதந்தசூத்திரத்தை அக்னியில் ஹோமம் செய்யவேண்டும். முடிவில் ஸதாசிவப் பெருமானைப் பூசித்து சீடனுடைய ஆன்மாவை ஒரு ஒளிப்பிழம்பாகப் பாவித்து ஹம்ஸமந்திரத்தை உச்சரித்துக் கொண்டே மூலாதாரத்தில் அதைச் சேர்க்கவேண்டும். மூலாதாரம் தொடங்கி அனைத்து ஆதாரங்களையும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே தருப்பை நுனியால் தொட்டுப் பின்னர் சீடனுக்கு அபிஷேகம் செய்யவேண்டும். பின்னர் சீடன் தன்னைச் சிவோஹம் என்று சிவபெருமானாகப் பாவிக்கவேண்டும். முடிவில் தியானம் செய்யும் முழங்கால்களை உடலோடு இறுக்கிக் கட்ட உதவும் யோகபட்டம் என்னும் துணியையும் யோக சாதனத்திற்குத் தேவையான மற்ற பொருள்களையும் சீடனுக்கு அளிக்கவேண்டும். இதுவே யோகதீக்ஷை எனப்படுகிறது.

BIBLIOGRAPHY

Sarvajñānottarāgama

Caruvaññāṉōttara ākamam ñāṉapātam tamiḻ mūlamum tūttukkuṭi po. muttaiyapillai eḻutiya muttiratṉam eṉṉum uraiyuṭaṉ kūṭiyatu, ed. Po. Muttaiyapiḷḷai, Devakottai, 1923.

Sarvaññāṉōttaram: Containing the Yogapāda along with the Patipaṭala, Svātmasākṣātkāropadeśapaṭala, Ṣaḍātmapaṭala, Bhūtātmādipaṭala and the Mantrapuruṣapaṭala of the Jñānapāda. Translated by Kuppusvāmirāju alias Brahmānandasvāmi and revised by Brahmasrī Subrahmaṇyaśāstri. Printed at Sankaravilasa Sarada Press, Thanjavur, 1933.

Vasudeva, Somadeva, *The Yoga of the Mālinīvijayottaratantra*, Chapters1-4, 7, 11-17. Critical edition, Translation and Notes. Collection Indologie, 97. Pondicherry: IFP/EFEO, 2004.

Mataṅgapārameśvarāgama

Mataṅgapārameśvarāgama (Vidyāpāda) with the commentary of Bhaṭṭa Rāmakaṇṭha, ed. N.R. Bhatt. Publications of the French Institute of Pondicherry 56, French Institute, Pondicherry, 1977.

Mataṅgapārameśvarāgama (Kriyāpāda, Yogapāda et Caryāpāda) avec le commentaire de Bhaṭṭa Rāmakaṇṭha, ed. N.R. Bhatt. Publications of the French Institute of Pondicherry 65, French Institute, Pondicherry, 1982.

Mṛgendrāgama

Śrīmṛgendram kāmikopāgamam vidyāyogapāda dvayamilitam śrībhaṭṭanārāyaṇakaṇṭhaviracitayā vṛttyā tadvyākhyayā'ghoraśivācāryaviracitayā dīpikayā cālaṅkṛtam, ed. Nā. Krishnasastri and K.M. Subrahmanyasastri, Sivagamasiddhanta paripalanasangha, Devakottai, 1928.

Kiraṇāgama

Kiraṇatantra.
edited by Ti. Rā. Panchapagesasivacarya and K.M. Subrahmanyasastri, Sivagamasiddhanta paripalanasangha, 16, Devakottai, 1932.

Bhaṭṭa Rāmakaṇṭha's commentary on the Kiraṇatantra. Volume I: chapters 1-6. Critical edition and annotated translation by Dominic Goodall. Publications of the French Institute of Pondicherry 86.1. Pondicherry: IFP/EFEO, 1998.

Sārdhatriśatikālottarāgama

Sārdhatriśatikālottarāgama with the commentary of Bhaṭṭa Rāmakaṇṭha, ed. N.R.Bhatt, Publications of the French Institute of Pondicherry 61, Pondicherry, 1979.

Suprebhdāgama

Suprabhedāgama printed by Mylai A̲lakappamutaliyār at Civañāṉapōtayantiracālai, Madras (Chennai), 1908.

LIST OF PAPER TRANSCRIPTS UTILISED

Acintyaviśvasādākhyāgama, T. 7, 8

Cintyāgama, T. 13.

Dviśatikālottarāgama, T. 317.

Makuṭāgama, T. 11, 18, 248.

Dīkṣādarśa, T. 153, 372

எங்கள் இல்லத் திருமண விழாவிற்கு
வருகை தந்து மணமக்களை
வாழ்த்தியருளிய
அன்பு நெஞ்சங்களுக்கு எங்களது
மனமார்ந்த நன்றிகளை
பேரன்புடன் காணிக்கையாக்குகிறோம்

சிவஸ்ரீ ரா. கங்காதரபட்டர்
ஸ்ரீமதி க. கௌரீ
மதுரை.

சிவஸ்ரீ ஷ. உக்ரபாண்டிய பட்டர்
ஸ்ரீமதி உ. மதுரவாணி
திருப்பரங்குன்றம் - மதுரை.

ரவி. சுரண்டை. செல்: 9443125178.